# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, தை 28உ (10-2-74) ஞாயிறு ஜனவரி 10 முஹறம 16 -புத்தகம் 27 இதழ்-24


- எங்கும் கறுப்புக்கொடி!
- கடையடைப்பு!!
- பாடசாலை பகிஷ்கரிப்பு!!!
- அனுதாபக் கூட்டங்கள்!!!

# தமிழ் ஈழம் முழுவதும்
# பூரண துக்க தினம்!

## தலைசாய்ந்த தமிழர்களின் பரிதாபக் காட்சி!



நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளான கடந்த சனவரித்திங்கள் 10ம் நாள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால், வெளிநாட்டு தமிழ் அறிஞர்களின் பேச்சுக்களைக் கேட்கவும் அவர்களுக்குப் பிரியாவிடை அளிக்கவும் திரண்டிருந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது பொலீசார் நடத்திய மிலேச்சத்தனமான காட்டுமிராண்டித் தாக்குதலைக் கண்டித்தும் அச்சந்தர்ப்பத்தின்போது இறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் — ஈழத் தமிழினத்தின் விடுதலை இயக்கமான தமிழர் கூட்டணியின் ஆணைப்படி தமிழ் ஈழம் அடங்கிலும் இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை பூரண துக்கதினத்தை தமிழ் மக்கள் அனுட்டிக்கிறார்கள்.

9-2-74 உடன் மேற்படி துக்க நிகழ்ச்சிகள் நடைபெற்று 31 நாட்கள் நிறைவு பெறுகின்றன.

கடையடைப்பு

கறுப்புக் கொடி

தமிழ் ஈழமான வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஒவ்வொரு இல்லங்கள், கடைகள், பொது நிலையங்கள், வாகனங்கள், தொழில் நிலையங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் அனைத்திலும் கறுப்புக்கொடிகளை பறக்கவிட்டும், பூரண கடையடைப்பு நடத்தியும் அரசுக்கு தமது கண்டனத்தையும், இறந்த தமிழ்த் தியாகிகளுக்கு தமது அஞ்சலியையும் அமைதியுடன் தெரிவிக்குமாறு தமிழர்கூட்டணி தமிழ் மக்களிடம் கோரியுள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இரங்கல் கூட்டம்!

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று மரணமான தமிழ்த்தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்து 9. 2. 74 மாலை பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் ஓர் இரங்கல் கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன், கலாநிதி பத்மநாதன், உட்பட பலர் பேசுகிறார்கள்.

## இலங்கைத் தமிழர் படுகொலைக்கு அ. தி. மு. க. கடும் கண்டனம்!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று தமிழர்கள் மீது நடத்திய மிலேச்சத்தனமான பொலிஸ் தாக்குதலுக்கும் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் இலங்கை அரசுக்கு கடும் கண்டனம் தெரிவிப்பதென சிதம்பரத்தில் நடைபெற்ற அண்ணா தி. மு. க. மாணவர்

10-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க, வர்த்தக தமிழ் ஊழியர் வீடுகள் தோறும் உண்ணாவிரதம்!

## கோவில்களில் விசேட பிரார்த்தனைகள்!

### நாடு முழுவதும் 1000 அனுதாபக் கூட்டங்கள்!

தமிழாராய்ச்சி மாநாட்டின் போது உயிர் கொடுத்த தமிழ்த் தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்து இம்மாதம் 9ம் திகதி தமிழ் ஈழமடங்கிலும் துக்கதினம் அனுட்டிக்கப்படும் அதே வேளையில், அரசாங்கத்திலும் வர்த்தகத் துறைகளிலும் பணியாற்றும் தமிழ் ஊழியர்கள் அன்றைய தினத்தை உண்ணாவிரதத்தில் கழிக்க இருக்கிறார்கள்.

அன்றைய நாளில் கோவில்களில் அல்லது தங்கள் தங்கள் வீடுகளில் உண்ணாவிரதம் அனுட்டிக்கும்படி தமிழ் அரசாங்க ஊழியர்களிடம் தமிழ் தொழிற்சங்கக் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன் கோவில்களிலும் தேவாலயங்களிலும் இறந்த தமிழ்த் தியாகிகளின் ஆத்மசாந்திக்காக விசேட பிரார்த்தனைகளையும் பூசைகளையும் நடத்துமாறும் மேற்படி தொழிற் சங்கக் கூட்டணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த். தொழிற் சங்கக் கூட்டணி சார்பில் 9.2.74ல் முகத்துவாரம் அருளுசலேஸ்வரர் கோவிலில விசேட பூசை நடைபெறுகிறது.

இறந்தவர்களுக்கு அனுதாபம்தெரிவித்து அன்றைய தினம் குறைந்தது 1000 கூட்டங்களை யாவது நாடு முழுவதும் நடத்துமாறு அகில இலங்கை இந்து இளைஞர் பேரவை தன்னுடைய கிளைகளுக்கும், ஏனைய பொதுப்பணி மன்றங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

31 நாட்களுக்கு முன்னர் ...... யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ள திரண்டு வந்திருந்த இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய வெறித்தாக்குதலின் பின்னர்— ஆங்காங்கே தமிழர் பலர் தலை சாய்ந்து கிடக்கின்ற பரிதாபக் காட்சியைத்தான் இங்கு காண்கிறீர்கள்!

படப்பிடிப்பு:—கைலைவாசன்

# அன்னைக்கு ஒரு கண்ணீர் மடல்!

அம்மா தமிழ்த்தாயே!

என் உயிருக்கு உயிரானவளே!

என் உணர்வே! என் வாழ்வின் கருப் பொருளே!

வடிகின்ற உன் கண்ணீரை நிறுத்து தாயே!

உன் கண்ணில் நீர்வடிகின்ற போது, என் நெஞ்சில் உதிரம் கொட்டுகிறது அம்மா!

உன் கண்ணீரை நிறுத்தும்படி நான் கேட்கும் போது, சோகம் கப்பிய உனது முகத்திலும் ஒரு சுந்தரப்புன்னகை இழையோடுவதையும் நான் காண்கிறேன் தாயே!

உன் புன்னகையின் பொருள் எனக்குப் புரிகிறது!

என்னை அழாதே என்று கூறுகிறாயே! அதே வேளையில் உன் கண்கள் தாரை தாரையாகக் கண்ணீர் வடிக்கின்றனவே. அது ஏன்? என்பது தானே உன்கேலிப்புன்னகை என்னைக் கேட்கின்றகேள்வி!

என்னை மன்னித்துவிடு அம்மா! எவ்வளவு முயன்றாலும் என் கண்கள் குளமாவதை என்னால் தடுத்து நிறுத்த முடியவில்லையே!

என் இதயத்திலிருந்து வடிகின்ற இரத்தக் கண்ணீருக்கு தடைபோட முடியவில்லையே!

நான் என்ன செய்வேன் அம்மா?

உனக்கு நானும் எனக்கு நீயும் ஆறுதலும் தேறுதலும் சொல்வதைத்தவிர வேறு நாம் என்ன செய்ய முடியும்?

நீயும், நானும், ஈழத்தில் வாழ்கின்ற உன் 35 இலட்சம் பிள்ளைகளும் — அதாவது எனது உடன்பிறப்புக்களும் — அழுவதற்கென்றே பிறந்தவர்களா?

ஏனையவர்களிடம் அடியும் உதையும், மிதியும் துப்பாக்கிச்சூடும் வாங்கி, சாகவும் அடிமைகளாக அல்லற்படவுமே பிறந்தவர்களா?

நம்முடைய கைகளிலே மாட்டப்பட்டிருக்கின்ற அடிமை விலங்கு பொடிப்பொடியாகிட மார்க்கமே இல்லையா?

ஆண்ட நம் பரம்பரை இன்று அடிபட்டு உதைபட்டு அணு அணுவாகச்சாக வேண்டியதுதானா?

இதுதான் நம் தலைவிதியா?

இதனைத் தலைவிதியென்று கூறுவதை நான் நம்பமாட்டேன்!

'விதி' என்பதில் எனக்கு துளியும் நம்பிக்கையில்லை!

'ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றி தாழாது உஞற்றுபவர்' என்றவள்ளுவன்வேதமே நம்வேதம்!

அப்படியானால்—

முப்பதோரு நாட்களுக்கு முன்னர் — எனக்கு, என்பிள்ளைகள் எழில்விழாஎடுத்தனரே அந்த விழாவின் இறுதிநாளில் என் எழிற் கோலம் கண்டிட—என் எழிலில் வெளிநாட்டு அறிஞர்கள் மயங்கி, கிறங்கி என்மீது பாடப் போகும் புகழாரங்களைக் கேட்டு சிந்தைகுளிர்ந்திட—வந்திருந்த என்மைந்தர்களில் ஒன்பது பேர் உடலை மண்ணுக்கும் உயிரை என்னிடமும் ஒப்படைத்தனரே……! இது விதியில்லையா? என்றுதானே கேட்கிறாய் அம்மா!

அது விதியல்ல அம்மா 'நிச்சயம் விதியல்ல!!

சதியம்மா! அது சதி! எதிரிகள் போட்ட சதி!!

சிங்கள ஏகாதிபத்தியச் செருக்கர் கூட்டம் அன்று அலைகடலென திரண்டிருந்த அந்த மக்கள் மலைமீது—திடீரென காரணமேதுமின்றி—சொல்லாமல் கொள்ளாமல் வந்து தாக்குதல் நடத்தாமல் இருந்திருந்தால் — அந்த ஒன்பது தமிழர்களும் நிச்சயம் பிணமாகியிருப்பார் என்று யாரும் ஆருடம் கூற முடியாது! அந்த ஏழு நாட்களிலும் எத்தனைபெரிய விழா நடைபெற்றது, உனக்கு!

எங்கு நோக்கிடினும் உன் புகழ்க்கொடியன்றோ பறந்தது அம்மா!

எவரது வாயிலும் உன் பெருமை பற்றியன்றோ பேசப்பட்டது?

ரோமாபுரி, அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, ஹங்கேரி, சுவீடன் — போன்ற வெளிநாடுகளிலிருந்து வந்திருந்த எத்தனையோ பேரறிவாளர்கள் உன் ஆற்றலும் அழகும், தனித்தியங்கும் உயர் தனிச்செம்மையும் பற்றி பேசியதைக் கேட்டு கேட்டு, எவ்வளவு இறுமாந்திருந்தேன்!

ஏனெனில் உனக்கு கிடைத்திடும் புகழ் அத்தனையும் உன் பிள்ளையாகிய எனக்குக் கிடைக்கும் புகழ் அல்லவா?

நீயும் உன்பிள்ளைகளாகிய நாங்களும் இதயம் பூரித்தது கண்டு — பொறாமைப் பேய்கள் விழிபிதுங்கின!

எட்டப்பத்துரோகிகள் மூலைக்குள் முடங்கினர்!!

சிங்கள ஏகாதிபத்தியத்துக்கு, வயிற்றுவலி கண்டது!

ஆதிக்க வெறிபிடித்தோர் ஆத்திரமடைந்தனர்!

அவர்களது வயிறு பற்றி எரிந்தது!!

அதன் பிரதிபலிப்புத்தான் — அதன் எதிரொலிதான்……!

சனவரி 10ம் நாளிரவு யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் எதிரே நீ கண்ட 'சமர்க்களம்'

என்ன……சமர்க்களம் என்றுசொன்னேன் தாயே?

அது தவறு!

உண்மையிலேயே ஒரு "சமர்க்களமாக" இருந்திருந்தால்—உன் மைந்தர்கள் எப்படி நடந்து கொண்டிருப்பார்கள் என்பதை பழைய வரலாறுகள் பேசுகின்றன! மாற்றார் எதும்பை எண்ணிக் கைகளில் கொடுத்திருப்பர் அன்றேல் நேர் நின்று மோதி அந்த இடத்திலேயே அத்தனை பேரும் வீரமரணம் அடைந்திருப்பார்கள்!

நடைபெற்றதோ எதிர்பாராத தாக்குதல்! தமிழினம் என்றுமே பின்பற்றாத அதர்மப் போர் முறை! கோழைகளின் 'வீரம்' அது!

அப்பாவிகளையும், நிராயுதபாணிகளையும், பெண்களையும் குழந்தைகளையும், வயோதிபர்களையும் தமிழர்கள் தாக்கியதாக வரலாறே இல்லை!

யுத்தம் நடத்துவதென்றாலும்—மேற்குறிப்பிட்ட அனைவரையும் தவிர்த்து, ஏனையோரைத்தான் தமிழர்கள் தாக்குவார்கள்!

அதுவும் — முன் எச்சரிக்கையின்றி — தாக்குதல் நடத்துவது கோழைகளின் வழியே தவிர தமிழர்கள் பின்பற்றி வந்த போர் நெறியல்ல!

ஆனால் — வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால், அப்பாவிகளான பொதுமக்கள், நிராயுதபாணிகள், பெண்கள், குழந்தைகள், வயோதிபர்—அனைவர் மீதும் சிங்கள ஆட்சியின் காவலர் படை எச்சரிக்கையேதுமின்றி திடுதிப்பென்று தாக்குதல் நடத்தியிருக்கிறது!

இதுதான் அவர்களின் "வீரம்"! இதுதான் அவர்களின் யுத்த 'தர்மம்'!

உன் கண்மணிகள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகள்! உன் குழந்தைகள் மீது குண்டாந்தடியடி! உன்னையே எண்ணுகின்ற நெஞ்சங்களிலே சப்பாத்துக் காலால் உதை!!

உன் புகழ்பாடிக்கொண்டே உன்மைந்தர்கள் அன்று குருதிகொட்டினர்!!

நல்ல வேளையாக உன் மூத்த புதல்வன் செல்வாவின் கட்டுப்பாட்டுக்குள் உன் பிள்ளைகள் அடங்கி வளர்ந்திருந்த காரணத்தால்—அதைத் தொடர்ந்து ஒரு குருக்ஷேத்திரம் உருவாகாது தவிர்க்கப்பட்டிருக்கிறது!

உன்னிடம் தங்கள் உயிரையும் தமிழ் மண்ணிடம் தம் உடலையும் ஒன்பது பிள்ளைகள் ஒப்படைத்து இன்றுடன் 31 நாட்கள் முடிவடைகின்றன.

இன்று அவர்களின் "அந்தியேட்டி" நாள்!

அவர்களது கல்லறைகளிலே இன்று நம் கண்ணீரை சிந்துவோம்! இதய மலர்களை எடுத்து அவர்களது திருவடிகளிலே சமர்ப்பிப்போம்!

அவர்கள் நம் நீண்ட வரலாற்றில், அழிக்க முடியாத உயிரோவியங்களாகி விட்டனர்!

அம்மா தமிழே! உனக்காக உயிர் விட்ட அவர்களது நினைவாக 'நடுகல்' ஏதும் தேவையில்லை!

ஏனெனில் நம் இதயங்களிலே 'நடுகல்'லாக அவர்கள் என்றுமே ஒளிவீசியபடி இருக்கப் போகிறார்கள்!

அந்தத்தியாகிகளைப் பெற்றெடுத்த அன்னை தந்தையரை கைகூப்பித்தொழுகிறேன்!

தங்கள் துணைவரைப் பலிகொடுத்த நங்கையர் வடிக்கின்ற கண்ணீர் கண்டு இதயம் பொங்குகிறேன்!

அன்று — யார் யார் தங்கள் மார்பிலே தாக்குதலை ஏற்று வீர வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்களோ — அவர்களையெல்லாம் கட்டியணைத்து அவர்கள் பெற்ற அந்த வீரவடுக்களில் எல்லாம் முத்தமாரி பொழிகிறேன்!

அதே நேரத்தில்—அம்மா!

அந்தத் தமிழ்த்தியாகிகளின் 'அந்தியேட்டி' நாளில் மற்றோர் உறுதியையும் உன்மைந்தர்களுடன் சேர்ந்து நானும் எடுத்துக்கொள்ளுகிறேன்—

அதாவது — உன்னையும் நம்மையும் பீடித்துள்ள அடிமை விலங்குக்கு விரைவில் 'அந்தியேட்டி' காணும் போராட்டத்தை விரைந்து நடத்துவோம்!

உன்னையும் எம்மையும் அடிமைகளாக்கி அரசோச்ச கனவு காணும், ஏகாதிபத்தியத்திற்கு விரைவில் சாவுமணி அடித்து "அந்தியேட்டி" நடத்திட உறுதியெடுப்போம்!

அம்மா! தமிழ்த்தாயே! உன் கைவிலங்கு விரைவில் ஒடியும்! நீயும் உன்பிள்ளைகளும் அரசாளும் காலம் விரைந்து தோன்றும்

இது சத்தியம்!

உன் பிள்ளை

**கோவை மகேசன்**

# வீரகேசரியும்-இரா. சுனுர்த்தனமும்!

வீரகேசரி நாளேடு, இந்நாட்டுத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பிரதிபலிப்பதாக அடிக்கடி கூறிக்கொண்டாலும், அந்த ஏடு இப்போது சில காலமாக "சணம் பித்தம் சணம் வாதம்" என்று கூறுவார்களே—அதேபோல தடுமாறி வருகிறது என்பது அதன் போக்கை உன்னிப்பாக கவனித்து வருபவர்களுக்குத் தெரியும்.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு சம்பந்தமாக — பெரும்பாலான தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு முரணாக — தபால மைச்சர் குமாரசூரியரைச் சார்ந்து நின்று — ஆசிரியத் தலையங்கம் தீட்டி — வீரகேசரி தனக்குத்தானே கரிபூசிக்கொண்ட செயலை தமிழ்மக்கள் அதற்குள் மறந்திருக்க முடியாது.

வீரகேசரிக்குத் தரப்பட்டு வந்த அரசாங்க விளம்பரங்கள் நிறுத்தப்பட்டவுடன், குமாரசூரியரையும், ஏனைய அரசாங்க பிரமுகர்களையும் எப்படியெல்லாமோ காக்காய்பிடித்து, மீண்டும் விளம்பரம் எடுப்பதற்கு வீரகேசரி ஆலாய்ப்பறப்பதை நாம் அறிவோம். ஆனால் எப்படித்தான் காக்காய் பிடித்தாலும் பலன் என்னவோ பூஜ்யம்தான்!

ஆனால் அதே வேளையில் தமிழ் மக்களால் மதிக்கப்படாத-தமிழ் மக்களால் வெறுக்கப்படும்—குமாரசூரியர் கும்பலுக்கு சார்பாக எழுதுவதன் மூலம் தமிழ்மக்களிடையே தனக்குள்ள மதிப்பை வீரகேசரி சிறுகச் சிறுக இழந்துவருகிறது.

இதோ, இப்போது— 26.1.74 இதழில் அநாவசியமாக, தென்னிந்திய தமிழ் ஏடுகளையும் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் இரா. சுனுர்த்தனத்தையும் வைது தனி தலையங்கம் எழுதியுள்ளது வீரகேசரி;

சுனுர்த்தனத்தை இப்படி தாக்கி எழுதினாலாவது அரசாங்கத்தின் கடாட்சம் தன் மீது விழாதா என்ற நப்பாசை போலும் வீரகேசரிக்கு!

யாழ் சம்பவங்கள் பற்றி சுனுர்த்தனம் கூறியது பலதும் பொய்யாம்! அவர் கூறியது பொய்யா அல்லவா என்பதைவிட அவர் கூறியது பொய்யா னு—சரியான — திட்டவட்டமான செய்திகளை வீரகேசரி தந்ததா? இல்லையே! சுனுர்த்தனம், நூற்றுக்கணக்கானபேர் இறந்தார்கள் என்று கூறவில்லையே! இறந்திருக்கக்கூடும் என்றுதானே கூறியிருக்கிறார்! இந்த வித்தியாசம் வீரகேசரிக்கு ஏன் விளங்காமல் போனது?

சனவரி 10ம் திகதி இரவு பொலிசார் நடத்திய காட்டுமிராண்டி தாக்குதலை நேரில் பார்த்துவிட்டு — தானும் அதில் காயமடைந்து — மறுநாள் 11ம் திகதி இந்தியாவுக்கு சென்றுவிட்டார் சுனுர்த்தனம். அங்கு சென்றவுடன், முதல்நாள் தாம் நேரில் கண்ட கொடூரத் தாக்குதலின் பயங்கரத்தை மனதில் கொண்டு, நூறு பேருக்குமேல் இறந்திருக்கலாம் என்று அவர் கூறியிருக்கிறார்! திட்டவட்டமாக அவர் எதையும் கூறவில்லையே!

இலங்கையிலுள்ள பத்திரிகைகள் அனைத்தும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழுள்ளன என்று சுனுர்த்தனம் கூறியிருப்பது பொய் என்று கூறும் வீரகேசரியார்—லேக் ஹவுஸ் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்ட பின்னர், இந்நாட்டுப் பத்திரிகைகள் அனைத்தும் அரசுக்கு அஞ்சி, தாமாகவே அரசின் ஊதுகுழல்களாக மாறிவிட்டன என்ற உண்மையை மறுக்கமுடியுமா?

அரசாங்கத்தின் நேரடிக் கட்டுப்பாடு இல்லாவிட்டாலும் நாளேடுகளை — குறிப்பாக தமிழ் நாளேடுகளை— குறிப்பிட்ட ஓர் அமைச்சர் தொலைபேசியிலேயே மிரட்டி பயமுறுத்தி அதிகாரம் செய்துவருகிறார் என்று கூறப்படும் பகிரங்க ரக

(7-ம் பக்கம் பார்க்க)




## (1) "தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

யாழ் — இதை நினைக்கும்போதே இனிமை நெஞ்சில் சுரக்கிறது. அதிலிருந்து கிளம்புகின்ற இன்னிசை நாதமோ இதயத்தை இன்ப வாரிதியில் குளிக்க வைக்கக் கூடியது. தமிழர்கள் கண்ட இசைக் கருவிகளிலும் யாழ் தனிச் சிறப்பு பெற்றது.

யாழுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பும் பிணைப்பும் யாராலுமே பிரித்திட முடியாதவை. தமிழுக்கே தனிச்சிறப்பாகவுள்ள 'ழ'கரம் யாழில் இடம்பெற்றுள்ளது மாத்திரமல்ல — தமிழைப் பேசினால் இனிமை; பாடினால் இனிமை; 'தமிழ்' என்றாலே இனிமை, பண்பு என்று நிகண்டு பேசுகின்றது. யாழை மீட்டினாலும் இனிக்கும்; தமிழைப் பேசினாலும் இனிக்கும்! இரண்டுமே இனிமையை அள்ளித்தருகின்ற கருவிகளாகும்!

அத்தகைய 'யாழை' — அதாவது தமிழை — இனிமையை-தனது பெயராகக் கொண்டு ஈழத்தமிழகத்தின் தலைநகராக விளங்கிடுவது யாழ்ப்பாணம்.

''யாழ்ப்பாணம் - எனும் சொல்லே போதும் தமிழர்கள் எவ்வளவு தொன்மை கொண்டவர்களாக இலங்கையில் வாழ்கிறார்கள் என்பதைக்கூற!— இங்கே நம் பேச்சு வழக்கிலிருக்கிற தமிழைவிட அங்குள்ளோர் பேசிடும் தமிழில் தூய்மையும் தொன்மையும் இருக்கிறது!''

—என்று இதனால்தான் இந்நூற்றாண்டின் ஈடில்லாப் பற்ற தமிழர் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்.

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு பற்றிய எனது இத்தொடர் கட்டுரைக்கு 'யாழில் எழுந்த தமிழோசை' என்று பெயர் சூட்டியதற்கு காரணமே இதுதான்!

யாழின் நரம்புகளை மீட்டுகையில் அதிலிருந்து கிளம்புவது இன்னிசைநாதம்! யாழ்ப்பாணத்திலிருந்து எழுந்ததும் 'தமிழ்' எனும் இன்னிசையாகும்! யாழோசையும் தமிழோசையும் எனக்கு ஒரு மாதிரியாகவே இருக்கின்றன — பல வேளைகளில் யாழோசையை விடத் தமிழோசையே அதிக சுவையைத் தந்திடுகிறது.

'யாழோசை' செவிக்கு மட்டுமே இன்பத்தைத் தரும் — தமிழோசையோ செவிக்கு இன்பத்தை தருவது மாத்திரமல்ல — சிந்தைக்கும் இன்பத்தையும் எழுச்சியையும் ஊட்டிடும்! உயிர்ச்சக்தியையும் அதைக் கேட்பவர்களுக்கு கொடுத்திடும்!!

இதனால் தான்,

''கனியிடை ஏறிய
சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய
தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனி பசு பொழியும்
பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும் -
இனியன என்பேன் -
எனினும்
தமிழை என்னுயிர்
என்பேன்''

என்று நெஞ்சம் உருக தமிழைப் பற்றி பாடினார் பாவேந்தர் பாரதிதாசன். அத்தகைய இனிமைத்தமிழ், யாழிலிருந்து கிளம்பும் போது மேலும் சுவை பெறுகிறது.

யாழிலிருந்து எழுந்த தமிழின் சுவைபற்றி - அனைத்துலகத் தமிழ் புலவர்கள் தமிழுக்கு சூட்டிய புகழாரம் பற்றி - இதயம் குதூகலித்திட இக்கட்டுரைத்தொடரை வாசகர்களுக்கு படைத்திடலாம் என்று எண்ணியிருந்த நான் — கண்கள் குளமாகிட கண்ணீர்வடித்தபடியே இதை எழுத ஆரம்பிக்கிறேன்.

இதயம் இரத்தக்கண்ணீர் வடித்திட, அந்த இரத்தக் கண்ணீரில் தொட்டே, உணர்ச்சியெனும் எழுதுகோல் கொண்டு இக்கட்டுரைத்தொடரை ஆரம்பிக்கிறேன்.

ஆம், மோகன இராகத்துடன், 1974 சனவரி மூன்றும் நாள் ஆரம்பமாகி, குதூகலத்துடன் சனவரி 9ம் நாள் வரை நடைபெற்று வந்த அனைத்துலகத் தமிழாராய்ச் மாநாட்டைக்கண்டு இதயம் பொறுக்க முடியாத தமிழ்மொழிப் பகைவர்கள், சனவரி 10ம் நாள் முகாரியுடன் அதை முடிக்கவேண்டிய நிலைமையை வலுக்கட்டாயமாக உண்டாக்கிவிட்டார்கள்;

மங்களம் பாடி முடிக்க வேண்டிய அந்த நாளில் வேண்டுமென்றே அமங்கலத்தை ஏற்படுத்திவிட்டார்கள் தமிழின் எதிரிகள்!

ஈழத்தமிழன், என்று தன் சொந்த ஆட்சியை அந்நியனிடம் போரில் பறிகொடுத்து அடிமையாக்கப்பட்டானோ — அதன்பின்னர், மொழியடிப்படையில் இன அடிப்படையில் ஒன்றுபட்டு

**கோவை-மகேசன்**

ஒருபெரும் தமிழ்த் தேசிய விழாவை ஈழத்தில் எடுத்து, மகிழ்ச்சியடைந்ததாக வரலாறு இல்லை! அத்தகைய தொரு வாய்ப்பு அவனுக்கு கிடைத்ததுமில்லை!

1948ல் ஆங்கிலேய ஆட்சி அகன்று, சிங்களவர் ஆட்சி ஏற்பட்டதன் பின்னர் குறிப்பாக தமிழ் மொழி இரண்டாந்தர நிலைக்கு தள்ளப்பட்டு — உரிமை இழந்த ஆண்டாகிய 1956ம் ஆண்டு முதல் — ஈழத்தமிழ் தேசிய இனம், தொடர்ச்சியாக துக்க நாட்களையும், துயர வெள்ளத்தையுமே கண்டு வந்திருக்கிறது. கறுப்புக் கொடிகளை உயர்த்தி, துயரத்தை வெளிக்காட்டவேண்டிய நிலைமையே இருந்து வந்திருக்கிறது.

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு ஒன்றுதான், ஈழத்தமிழினத்தார் அனைவரும் தமிழ்த்தேசிய உணர்வுடன், எழுச்சியுடன், மொழி இன அடிப்படையில் கொண்டாடி மகிழத்தக்க ஒரு பெரும் விழாவாக வந்து அமைந்தது.

எனவேதான் ஈழத்தமிழர் நெஞ்சங்களில் குமுறிக் கொண்டிருந்த தமிழ்ப் பேரார்வம், பொங்கி பிரவாகித்துப் பாய்ந்திட அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஒருபெரும் வாய்ப்பாக அமைந்தது.

ஆம், நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு — அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளையினர் நடத்திய ஒரு விழாவா என்றால், இல்லை என்பேன்! இது தமிழ்மக்கள் தாமாகவே முன்வந்து நடத்திய தமிழ்த்தேசிய எழுச்சி விழாவாகும்!



தமிழ் கேட்க வந்தோர் சிலர் தலைசாய்ந்த பின்னர் யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் காணப்பட்ட பயங்கர அமைதி!

செந்தமிழ் மக்கள் சிந்தை குளிர்ந்திட, தம் சிறிளமைச் செல்வியாம் பைந்தமிழ்க் கன்னிக்குஎடுத்திட்ட எழுச்சி விழா — மகிழ்ச்சி விழாக் கண்டு, இதயம் இருண்டவர்கள் — முகம் கறுத்தவர்கள் முணுமுணுத்தவர்கள். — பொறாமையும் பொச்சரிப்பும்கொண்டவர்கள் - ஆதிக்க வெறி பிடித்தவர்கள் — மாநாட்டின் இறுதி நாளில் இரத்த ஆறு ஓட வைத்திருக்கிறார்கள்!

1974 சனவரி பத்தாம் நாள் மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் நான் கண்ட காட்சி—அப்பப்பா—பார்த்த இடமெங்கும் நீக்கமற நிறைந்து காணப்பட்ட தமிழர்களின் முகங்களையெல்லாம் உற்று உற்றுப் பார்த்தேன்; ஆசை தீர பார்த்தேன். அவர்கள் முகங்களில் தான் எத்துணை மகிழ்ச்சி — எத்துணை ஆர்வம்!

''தமிழரென்று சொல்லிக் கொள்கின்றோம் நாமும—



'வீரத் தமிழர்'
வித்தியானந்தன்

தமிழ் நாட்டின் முன்னேற்றம் விரும்புகின்றோம்— எமதென்று சொல்கின்றோம் நாடோறுந்தான் எப்போது தமிழனுக்குக் கையாலான நமதுழைப்பை ஒரு காசைச் செலவு செய்தோம்?''

என்று தம் துணைவரைத் துணைத்தெடுத்து தமிழ்ப்பணிக்கு அவர்களைத் தூண்டிவிடுகின்ற தமிழ்ப்பெண்டிர், தம் மழலைச் செல்வங்களுடன் ஆங்கு பல ஆயிரக்கணக்காக நிறைந்து காணப்பட்டதும் இளையோரும் முதியோரும், எழில் குலுங்கும் தமிழ் நங்கையரும் இதயம் நிறைய மகிழ்ச்சியிலே முட்டி மோதிட, அலை அலையாக அந்த மைதானத்தில் திரண்டு நின்ற காட்சியும் — ஈழத்தமிழகம் இதுவரை காணாத எழுச்சிமிகு காட்சியாகும்!

எதற்காக அவர்கள் இப்படித் திரண்டனர்? ஏன் அவர்களது அகமும் முகமும் மலர்ந்திருக்கின்றன? எந்தப் பேர் உணர்ச்சி அவர்களை இப்படி ''உள்ளத்தால் ஒருவராக்கி'' அங்கு கொண்டு வந்து சேர்த்திருந்தது? எந்த சக்தி அவர்களை இப்படி ஒன்றிணைத்து வைத்திருக்கிறது?

ஆம், அந்த சக்திதான் தமிழ் எனும் மாபெரும் சக்தி, அந்த உணர்ச்சிதான் 'தமிழ்' எனும் பேருணர்ச்சி; ஆண்டான் அடிமை உயர்ந்தவன் தாழ்ந்தவன் எனும் சாதியுணர்ச்சி, ஏழை, பணக்காரன் எனும் வர்க்க உணர்ச்சி, இந்து, கிறிஸ்தவன் இஸ்லாமியன் எனும் மத உணர்ச்சி — போன்ற அத்தனை உணர்ச்சிகளையும் ஜீரணித்து — அதற்கு மேலாக நின்று சுடர் விட்டுக்கொண்டிருந்த அந்த உணர்ச்சி தான் தமிழுணர்ச்சி!

இதனால் தான் அண்ணா கூறினார் — தமிழை, தமிழர்கள் கருத்துக்களைப் பரிமாறிடும் ஒரு கருவியாக மட்டும் கொண்டிருக்கவில்லை தங்கள் வாழ்வின் வழிகாட்டியாகவும் தமிழையே கொண்டிருக்கிறார்கள், என்று! அதைத்தான் ஈழத்தமிழர்கள் தமிழின் மீது காட்டிய உணர்ச்சியும் எடுத்து விளக்கியது!

தமிழ் வளர்க்கும் வெளிநாட்டுப்புலவர்களின் அழகு தமிழைக் கேட்டிடவும், அப்புலவர்களின் தொண்டுகளுக்கு வாழ்த்துக் கூறி, அவர்களை வழியனுப்பிடவுமே தமிழர்கள் ஆவலுடன் அங்கே வெள்ளம் போல் கூடியிருந்தார்கள்.

வெளிநாட்டு அறிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் பரிசளிப்பதற்காக வீரசிங்கம் மண்டபத்தின் உள்ளே ஆரம்பமான கூட்டத்துக்கு 'வீரத்தமிழர்' என்று இன்றைக்கு தமிழ் மக்கள் அனைவராலும் இதயம் குளிரப் பாராட்டப்படும் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை தாங்கி அருமையான உணர்ச்சிமிக்க உரையொன்றை நிகழ்த்தினார்.

''சென்னையில் நடந்த இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ் நாடு அரசினதும் இந்திய அரசினதும் ஆதரவுடனும் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் சிறப்பாக நடைபெற்றது. ஆனால் இங்கு நடந்த மாநாடு, அரசாங்கத்தின் ஆதரவும் ஒத்துழைப்பு மின்றி நடைபெற்ற மாநாடு மட்டுமல்ல- அரசின் எதிர்ப்பின் மத்தியிலும் நடைபெற்ற ஒரு மாநாடாகும். இந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடித்த தமிழ் மக்களுக்கு எனது நன்றி''

என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் பேசிய போது மக்கள் எழுப்பிய கையொலி அடங்க சுமார் 15 மணித்துளிகள் பிடித்தன. என்றால் மக்களின் உணர்ச்சியின் அளவை அதிலிருந்து கணிக்க முடியும்.

வித்தியானந்தன் தொடர்ந்து பேசினார் :-

நான்காவது மகாநாட்டை இலங்கையில் வைப்பதெனப் பாரிசில் நடந்த மகாநாட்டின்போது தீர்மானிக்கப்பட்டது. மகாநாட்டை எங்கே வைப்பது என்ற பிரச்சினை எழுந்தது; மகாநாட்டு குழுத் தலைமைப்

(9-ம் பக்கம் பார்க்க)

**எண்ணம்**

# இந்திரா-சிறிமா உடன்படிக்கை!

அண்மையில் இந்தியாவுக்கு சென்றிருந்த இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, இலங்கையின் பொருளாதார வளத்துக்கும் வாழ்வுக்குமாக தங்களை அர்ப்பணித்து வரும் மலைநாட்டுத் தமிழர்களில் மேலும் 75,000 பேரை இந்தியாவுக்கு விரட்டுவதற்கு இந்தியப் பிரதமருடன் ஓர் ஒப்பந்தம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார்!

பிரச்சினையுடன் நேரடியாக சம்பந்தப்பட்ட மலைநாட்டுத் தமிழர்களின் பிரதிநிதிகளையோ, தமிழக அரசையோ எது விதத்திலும் கலந்துகொள்ளாமல்—அவர்களது அபிப்பிராயங்களை அறிந்துகொள்ளாமல்—இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் இந்த மனித ஏற்றுமதிக்கு இணக்கம் தெரிவித்துள்ளார்;

திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுடன் 1964ம் ஆண்டு ஒப்பந்தம் செய்துகொண்டபோது, காலம்சென்ற லால்பகதூர் சாத்திரி எப்படிப்பட்ட தவறை இழைத்தாரோ, அதே தவறை இப்போதைய இந்தியப் பிரதமரும் இது விஷயத்தில் இழைத்திருக்கிறார் என்றே கருதப்பட வேண்டியுள்ளது;

சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தின் போது—இணக்கம் காணப்படாத ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் 'நாடற்ற' மக்களில் 75,000 பேரை ஏற்றுக்கொள்வதாக இந்தியப் பிரதமர் இலங்கைப் பிரதமருடன் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கு காரணம் என்ன?

இந்தியாவின் பகை நாடான சீனு—இலங்கைக்கு ஆயுத உதவிகளையும் நிதியுதவிகளையும் ஏனைய உதவிகளையும் அள்ளி அள்ளி வாரி வழங்கி வருவதன் மூலம் இலங்கை அரசை தனது கைக்குள் போட்டுக்கொள்ள முயற்சித்து வருவதையும், இலங்கையை சீன சார்பு நாடாக மாற்றி இந்தியாவுக்கு எதிரான களமாக இலங்கையை பயன்படுத்திட சீனு முயற்சித்து வருவதையும் உலக இராசதந்திரிகள் கவனித்து வருகிறார்கள்.

இலங்கை அரசு சீனுவின் பக்கமே சாய்ந்துவருவதாக அண்மையில் சோவியத் பத்திரிகை ஒன்று பகிரங்கமாகவே கூறியிருந்ததும்—சீனுவே இலங்கையின் உண்மையான நண்பன் என்று இலங்கையின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் அடிக்கடி சீனுவைப் புகழ்ந்து பாராட்டி வருவதும் இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

எனவே இந்த அச்சந்தான்—அதாவது இலங்கை அரசின் நட்பைப்பெறுவதில் சீனுவையும் விஞ்சவேண்டுமென்ற ஆர்வம்தான்—புதிதாக 75,000 மலைநாட்டுத் தமிழர்களை ஏற்றுக்கொள்வதற்கு ஒப்புக்கொள்ளும் ஒரு சூழ்நிலைக்கு இந்தியப் பிரதமரை தள்ளியதா என்பதே இன்று இலங்கை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ள ஒரு கேள்வியாகும்.

இதற்காகவே இந்திய அரசு இவ்வாறு நடந்து கொண்டிருக்குமானால்—அது தான்போட்ட கணக்கு தப்புக்கணக்கு என்பதையும், 'ஆறுகடக்கும் வரைதான் அண்ணன் தம்பி—ஆறு கடந்த பின்னர் நீ யாரோ நான் யாரோ' என்ற நிலையைத்தான் இலங்கை அரசு மேற்கொள்ளப்போகிறது என்பதையும் வருங்காலம் நிச்சயமாக எடுத்துக் காட்டத்தான் போகிறது!

ஆனால் அதே நேரத்தில் இந்த ஒப்பந்தத்தாலும்—முந்திய சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தாலும் எழுந்துள்ள சிக்கலைப்பற்றி இங்கு சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும்.

சிறிமா—சாத்திரி ஒப்பந்தப்படி, எதுவித பலவந்தமோ தூண்டுதலோ எதுவுமின்றி—ஐந்தே கால் இலட்சம் பேரை இந்தியாவும், மூன்று இலட்சம் பேரை இலங்கையும் ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது. அதாவது இதன்படி—இலங்கை அரசாங்கத்தினால் நாடற்றவர்களாக்கப்பட்ட 8¼ இலட்சம் பேரின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டதாக அறிவிக்கப் பட்டது. மிகுதி 1,50,000 மக்களின் பிரச்சினைக்கு பின்னர் தீர்வு காண்பதாக அப்போது ஒப்புக்கொள்ளப்பட்டது!

இதன் பின்னர்—சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் சட்டமாக்கப்பட்டு—நாடற்ற மக்களிடம், இலங்கை, இந்திய குடியுரிமைகளில், விரும்பிய நாட்டின் குடியுரிமைக்கு விண்ணப்பிக்கும்படி இருநாட்டு அரசுகளும் சுதந்திரமான சுயேச்சையான வாய்ப்பை அளித்தபோது—ஏறத்தாழ 7 இலட்சம் பேர் இலங்கையையே தம் தாய் நாடாக ஏற்று, இலங்கைக் குடியுரிமைக்கு விண்ணப்பித்திருக்கின்றனர்; 4 இலட்சம் பேர் மட்டுமே இந்தியாவை தம் தாய்நாடாக ஏற்று இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிக்க முன்வந்தனர்.

அதாவது சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் 8¼ இலட்சம் மக்களின் குடியுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காண மட்டுமே ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டாலும்—அந்த ஒப்பந்தத்தின் கீழ் குடியுரிமை விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது—ஏறத்தாழ 11 இலட்சம் பேர் தாங்கள் வாழ விரும்பும் நாட்டை சுதந்திரமாக தெரிவு செய்து, மனுச்செய்திருக்கிறார்கள். இதன் பொருள் என்ன வென்றால்—சிறிமா சாத்திரி ஒப்பந்தத்தில், பின்னர் தீர்வு காண்பது என்று விடப்பட்ட, 150,000 நாடற்ற மக்களும் தங்கள் பிரச்சினைக்கு தாங்களாகவே தீர்வு கண்டு—தாங்கள் வாழவிரும்பும் நாட்டைத் தாங்களாகவே தெரிவு செய்து விட்டார்கள் என்பதே!

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட நாடற்ற மக்களின் சுயேச்சையான — எவ்வித தூண்டுதலுமற்ற — சுதந்திரமான — இம்முடிவுக்கு அமைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமேயன்றி — இருநாட்டுப் பிரதமர்களும் கூடிப் பேசி ஒரு முடிவையெடுப்பதும், அம்முடிவை அந்த மக்கள் மீது திணிப்பதும் மனித உரிமை சாசனத்தைக் குழி தோண்டிப் புதைப்பதாகவே முடியும்!

# வீர இளைஞன் சரவணபவன்

பால் வடியும் முகத்துடன் படத்தில் காணப்படும் இந்த தமிழ் இளைஞர் இன்று நம்மிடையே இல்லை;

அவர் மண்ணோடு மண்ணாகி 31 நாட்கள் முடிந்து விட்டன.

இவரது பெயர் பரஞ்சோதி சரவணபவன்; 25 வயதே நிரம்பிய இந்த இளைஞர் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று தமிழின் சுவைகேட்க வந்து—தம்மைப் பலி தந்த ஒன்பது தியாகிகளில் ஒருவராவர்;

பருத்தித்துறை காட்லிக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், ஜி. சி. ஈ. (உயர்தர) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார்.

தந்தையார் பெயர் இளையதம்பி பரம்சோதி தயார் பெயர் கண்மணி; ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் இவருக்குண்டு.

தமிழர் விடுதலையில் நாட்டம் கொண்ட இந்த இளைஞர் பருத்தித்துறை தமிழரசு வாலிப முன்னணியின் உறுப்பினருமாவர். வாலிப முன்னணி நடத்திய



சகல ஊர்வலங்களிலும் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

இவரது இறுதி ஊர்வலம் பருத்தித்துறையில் நடைபெற்றபோது கடைகள், தொழில் நிலையங்கள் அனைத்தும் கதவடைப்பு செய்யப்பட்டிருந்ததுடன் எங்கும் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டு நகரமே துயரமயமாகி காணப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் பருத்தித்துறை, உடுப்பிட்டி பா.உ.க்களின் முன்னே செல்ல சுமார் 500 வாலிபர்கள் கறுப்புப்பட்டிகளுடன் பின்னால் அணிவகுத்துச் சென்றனர்.

தமிழன்னையிடம் தன்னை ஒப்படைத்த இளைஞர் சரவணபவன் நம் இதயங்களில் என்றும் வாழ்வார்.

இவரது பிரிவு பற்றி பெற்றோர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது:—

"வீட்டிலே உள்ள அனைவரிலும் உணர்ச்சித் துடிப்புமிக்கவர் சரவணபவன். வீட்டிலுள்ள பெரியோரிடம் கூட தமிழ் பற்றியும் தமிழர் உரிமை பெருமை பற்றியும் விவாதிப்பார். அதிதீவிர ஆத்மீக நம்பிக்கையுடையவர். தமிழுக்காக உயிர் துறப்பேனென அடிக்கடி சபதம் செய்வார். சொன்ன படியே தமிழுக்காக தமது உயிரைத் தியாகம் செய்தும் விட்டார் இவரைப் பெற்ற நேரத்தில் அடைந்த மகிழ்ச்சியைவிட தமிழுக்காக இவர் உயிர் கொடுத்ததை யிட்டு நாம் பெருமைப் படுகிறோம்!"

# பொலிஸ் அட்டூழியத்திற்கு தமிழ் தொழிற் சங்கக் கூட்டணி கண்டனம்!

31.1.1974ல் நடைபெற்ற தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டத்தில் ஒரு மனதுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், புகைவண்டிப் பகுதி ஊழியர் சங்கம், இலங்கைத் தொழிலாளர் சமூகம், தமிழ் தட்டெழுத்தாளர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குனர் சங்கம், துறைமுக வழிகாட்டி ஊழியர் சங்கம், மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கம், கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் ஆகிய ஒன்பது தொழிற்சங்கங்களை ஒன்றிணைத்துள்ள தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியானது—

1974ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 10ம் நாள் இரவு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டப முன்றலில் நடைபெற்ற நான்காம் அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு இறுதி நிகழ்ச்சியின்பொழுது கண்ணியத்துடனும் கட்டுப்பாட்டுடனும் லட்சக்கணக்கில் திரண்டிருந்த தமிழர் கூட்டத்தின் மீது காரணம் எதுவும் இன்றி ஒன்பதின்மர் உயிர் இழப்பதற்கும், நூற்றுக்கணக்கானோர் படுகாயங்கள் உற்று பரிதவிப்பதற்கும், ஆயிரக்கணக்கானோர் உடைமைகளை இழந்து திகைப்பதற்கும், பல்லாயிரக்கணக்கானோர் மறு நாள் வரை தத்தமது இல்லிடங்கள் செல்லமுடியாது திகைத்தோடிப் பரிதவிப்பதற்கும், இன்னும் சொற்களில் விபரிக்கமுடியாத துன்பங்களுக்கு ஆளாவதற்கும் காரணமாக இருந்த பொலிசாரின் திட்டமிட்ட வெறித்தாக்குதலையும், கண்ணீர் புகைப் பிரயோகங்களையும், இவற்றைத் தொடர்ந்து யாழ் நகரின் பல பாகங்களிலும் பொலிசார் நடத்திய எதேச்சாதிகாரமான வன் தாக்குதல்களையும் மிக வன்மையாகக் கண்டிப்பதுடன்,

இந்நாட்டைத் தாயகமாகக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொடக்கம் தன்மானத்துடன் வாழ்ந்துவரும் தமிழ் தேசிய இனம் ஜனநாயகத்திற்கும், சமதர்மத்திற்கும், உலக நாடுகள் அவையின் மனித உரிமைக் கோட்பாடுகளுக்கும், இன்னோரன்ன பிறநிலைகளுக்கும் அமைய நடாத்திய தமிழாராய்ச்சி மாநாட்டுக் கூட்டத்தில் மனித வேட்டையாடிய பொலிசாரின் படுபாதகச் செயலுக்கு தகுந்த நடவடிக்கை எதுவும் எடுக்காது இருக்கும் அரசாங்கம், அரசியல் கலப்பற்ற கலாச்சார மாநாட்டிற்கு அரசியல் வண்ணம் தீட்டுவதனாலும், கட்டுப்பாட்டிற்கு இலக்கணமாக அமர்ந்திருந்த அப்பாவி மக்கள் குழப்பம் புரிந்ததாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன பொய் செய்திகளால் வீண் பழி சுமத்துவதனாலும் தமிழ் மக்களை மனிதாபிமானத்துடன் நடாத்த தவறிய பொறுப்பில் இருந்து ஓடி ஒளித்துவிட்டதென்பதனை தெளிவுபடுத்தும் அதே வேளையில்

அண்மைக் காலங்களில் நாட்டின் சிங்களப் பகுதிகளில் நடைபெற்ற அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட மக்கள், சட்டத்தையும், ஒழுங்கையும் மீறி பலாத்கார முறைகளில் வீதிகளை தடை செய்து பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திய பொழுதெல்லாம் சட்

(7-ம் பக்கம் பார்க்க)

இந்தியப் பிரஜாவுரிமை இடாப்பை மீண்டும் திறந்து இந்தியப் பிரஜாவுரிமைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுமானால்—அது சம்பந்தப்பட்ட மக்களின் சுதந்திரமான முடிவுக்கு ஒரு போதுமே வழி வகுக்காது! மலையகத்தில் பசி, பட்டினி வேலையற்ற பிரச்சினை போன்றவற்றைத் தோற்றுவித்தும் — மலையகத் தமிழர்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சென்று குடியேறி விவசாயம் செய்ய விடாமல் அவர்களை அங்கிருந்து துன்புறுத்தி துரத்தியும் — பல்வேறு தொல்லைகள் கொடுத்தும், மலைநாட்டுத் தமிழர்கள் இந்நாட்டில் வாழ முடியாமல் இந்நாட்டைவிட்டு தாமாகவே ஓடவேண்டிய ஒரு நிர்ப்பந்த சூழ்நிலையை இலங்கை அரசு வேண்டுமென்றே தோற்றுவித்து வருகிறது!

இந்த நிலையில்—இந்திய பிரஜாவுரிமை இடாப்பை மீண்டும் திறக்கும் எந்த முயற்சியும்—சுதந்திரமாக ஏற்கெனவே தங்கள் நாட்டைத் தெரிவு செய்திருக்கும் மக்களின் உரிமையை பாதிப்பதாகவே அமையும். இந்தியப் பிரஜாவுரிமை இடாப்பு மீண்டும் திறக்கப்படுமானால் — மலைநாட்டுத் தமிழர்களுக்கு இன்னும் பல கொடுமைகளை இழைத்து — அவர்கள் இந்தியப்பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்தே தீரவேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலையை நிச்சயம் இலங்கை அரசு தோற்றுவிக்கும். இந்த நிலை தோன்றுமானால் — அது பலாத்கார நாடு கடத்தலுக்கு வழி வகுப்பதாகவே அமையுமன்றி—மக்களின் சுயேச்சையான தீர்ப்பாக அமையாது! இதையே இந்திய அரசின்கவனத்துக்கு இடித்துக்காட்ட விரும்புகிறோம்!

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள இந்திய வம்சாவளியினருக்கும் ஏனைய பிரஜைகளுக்குமிடையே இலங்கை அரசு பல்வேறு துறைகளிலும் காட்டி வரும் பாரபட்சங்களைப் பற்றி—இந்தியப் பிரதமருக்குப் பலரும் பல தடவைகளில் சுட்டிக் காட்டியிருந்தும், இது பற்றி இலங்கைப் பிரதமருடன் அவர் எதுவும் பேசியதாகத் தெரிவிக்கப்படாதது—தமிழ் மக்கள் அனைவருக்கும் மிகுந்த ஏமாற்றத்தையே அளித்துள்ளதென்பதையும் இந்திய அரசின் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம்;

# எளிய நடைக் கவிதையும் ஈழத்து மகாகவியும்!



யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கலாநிதி சாலை இளந்திரையன் அவர்களால் சமர்ப்பிக்கப் பட்ட கட்டுரை இங்கு இடம் பெற்றுள்ளது.

—ஆர்.

## கலாநிதி சாலை இளந்திரையன்

இலக்கியத்தில் எளிமை' ஆடம்பரம் என்னும் இரண்டு போக்குகளுக்கும் எப்போதும் இடம் இருந்தே வந்திருக்கிறது. நமது இலக்கண நூலில் (தண்டியலங்காரம்) சொல்லப்படும் வைதருப்ப நெறி என்பது, பொருளிலும் சொல்லாட்சியிலும் இயல்பான இயம்பு முறையைக் குறிக்கிறது. கவுட நெறி என்பது, கற்பனையிலும் சொல்லாட்சியிலும் ஆடம்பரமான இயம்புமுறையைக் குறிக்கின்றது. ஆனாலும், இந்த நூற்றாண்டில் எழுந்த எளியநடைக் கவிதை என்னும் கொள்கையை இந்தப் பழைய நெறிகளோடு குழப்பிக்கொள்ளக் கூடாது:

### நோக்கம்

முன்பு, எளியநெறி என்பது, 'எளிமையில் இன்பம்' என்னும் பொதுவான குறிக்கோளுடன் ஒன்றுகி, கவிதை படிப்போரின் ஒருவித வசைமைப்பாட்டு ஆவலை மட்டுமே தணிவித்தது. இன்று எளியநடைக் கவிதை எனப்படுவது,— கவிதை போன்ற கலைகளைப் படித்துச் சுவைப்போர் குறிப்பிட்ட சிலரே என்ற பழையநிலையை மாற்றி,—எல்லோரும் படித்துச் சுவைத்துப் பொருளறிந்து பயனடையும் விதமாகக் கவிதை உருக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் எடுத்துரைக்கப்படுகிறது. இந்தக் கொள்கையும், கடந்த சுமார் 50/60 ஆண்டுகளுக்குள் பல வளர்ச்சி நிலைகளை அடைந்துள்ளது. அந்த நிலைகளை எடுத்துரைத்து, அவற்றுள் ஈழத்து மகாகவி (உருத்திரமூர்த்தி)க்கு உள்ள இடத்தை மதிப்பிடுவதே இந்த ஆய்வுரையின் நோக்கம்.

### பாரதி வாக்கு

'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்.' இவ்விதம் சுப்பிரமணிய பாரதி சொல்லும் போது, 'வழக்காறு ஒழிந்ததை வைத்து எழுதித்தான், பிழைக்கும் நிலைமை பெறலாம் என்றும், புதுச்சொல் புதுநடை போற்றேல் என்றும், நந்தமிழ்ப் புலவர் நவின்ற' கொள்கைக்கு எதிரான ஒரு குரலே கேட்கிறது: அதாவது, வழக்கொழிந்த சொற்களையும் (பாமர) மக்களுக்குப் புரியாத நடையமைப்பையும் கொண்ட கவிதைகளுக்குப் பதிலாக, மக்கள் படித்த உடனே புரிந்து கொள்ளக் கூடிய (பேச்சு வழக்குக்கு மிக அருகில் உள்ள) ஒரு நடையில் கவிதை இயற்றப் படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது:

### பாரதிதாசன் பகன்றது

பாரதிதாசன் தம்முடைய பாண்டியன் பரிசு புத்தகத்தின் முன்னுரையில், 'எளிய நடை ஒன்றாலேயே தமிழின் மேன்மையை, தமிழின் பயனைத் தமிழர்க்கு ஆக்க முடியும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை' என்று பேசும் போதும் மொழி நடையையே அவர் குறிப்பிட்டார் என்பது விளங்குகிறது. அதே முன்னுரையில், (பாண்டியன் பரிசு புத்தகத்தைப் பற்றி) 'தொடக்கப் படிப்பினரும் புரிந்துகொண்டார்கள் இச்செய்யுளின் பொருளை எனின், — அதுதான் எனக்கு மகிழ்ச்சியூட்டுவது' என்று அவர் கூறுவதும் இதனை மெய்ப்பிக்கின்றது.

நடையில் எளிமை என்பது மக்களுக்கு விளங்கக் கூடிய சொற்களால் மட்டுமே ஆகி விடாது. மக்களுக்குப் பழக்கமில்லாத பொருள்களையோ கருத்துக்களையோ மக்களுக்குத்தெரிந்த சொற்களை மட்டுமோ வைத்து விளக்கிவிட இயலாது. திருமணம் செல்வக் கேசவராயர் சொன்னதைப்போல, எல்லாப் பொருள்களையும் எளிய சொற்களாலேயே விளங்க வைத்துவிடலாம் என்பது இயல்வதன்று; சில பொருள்கள், அவைகளுக்குரிய கலைச்சொல் என்னும் பரிபாஷைச் சொற்களாலேயே சரியான விளக்கம் பெறும்: அவைகளைப் பற்றிய அடிப்படை அறிவு இல்லாதவர்களுக்கு அந்த எழுத்தோவியம் விளங்கவில்லை என்பதாலேயே அதைக் கடுநடை உடையது என்று சொல்ல இயலாது. 'ஒரு பொருளைப் புரிந்து கொள்ளும் அடிப்படைப் பயிற்சி இல்லாதவர்கள் அதனிடத்து ஆர்வம் கொள்ள முடியாது' என்னும் கிராப்டன் கணக்கனஞ்சியக் கூற்றும் இதையே குறிப்பாக உணர்த்துகிறது:

### கம்பனும் பாரதியும்

பாரதியின் தமிழ்ப்பணியைப் பாராட்டுகிற பாரதிதாசன், 'பன்னீராயிரம் பாடிய கம்பனும், இப்பொது மக்கள்பால் இன்தமிழ் உணர்வை எழுப்பியது உண்டோ? இல்லவே இல்லை!' என்கிறார். ஆனால் 'கம்பநாடனை கவிதையிற் போல் கற்றோர்க்கு இதயம் களியாதே!' என்றும் 'கம்பநாடு உடைய வள்ளல்,— கவிச்சக்கரவர்த்தி, — பார் மேல், நம்பு பாமாலையாலே நரருக்கு இன்று அமுதம் ஈந்தான்!' என்றும் பிறவாறும் கம்பன் கவிதை பாராட்டப் பட்டிருப்பதை நாம் அறிவோம். அந்தக் கவிஞனும் பொதுமக்களிடையே தமிழ் (இலக்கிய) உணர்வை ஊட்ட முடியவில்லை என்பதே, பாரதிதாசன் கம்பனிடம் காணும் குறை. அந்தக் குறைக்கு விளக்கம் தருவது போல, 'இந்த நாளில் இந் நாட்டு மக்கட்கு வேண்டும் பண்பு, வேண்டும் செயல்களை, கொஞ்சமும் பாரதி அஞ்சாது கூறினன்' என்கிறார் கவிஞர். அதாவது, மக்களின் வாழ்வோடு நேரிடையாகத்தொடர்புடைய கருத்துக்களையும் செய்திகளையும் வைத்துப் பாடியதால், மக்களிடையே உணர்வை எழுப்ப முடிந்தது என்பதும், அப்படிச் செய்யாததால் கம்பனால் அதைச்செய்ய முடியவில்லை என்பதும் குறிப்பு:

### மகாகவியின் ஓர்மை

இந்த இரண்டு கவிஞர்களும், எளியநடை பற்றிப் பேசும் போது சொல்லாட்சி, வாக்கியத்தின் (அல்லது பாட்டின்) சிக்கலற்ற அமைப்பு ஆகியவற்றையே. குறித்தாலும்.— மக்களோடு தொடர்புடையதும் அவர்கள் விரும்பியும் எளிதாகவும் தெரிந்து கொள்ளக் கூடியதுமான பொருட் புதுமையும் எளியநடைப் பாட்டுக்கு அவசியம் என்ற மெல்லிய ஓர்மை, பிற்காலத்தில் பாரதிதாசனுக்கு ஏற்பட்டிருந்தது என்று தெரிகிறது: ஆயினும், பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் பிந்திய கவிஞர்களே இதைத்தெளிவாக உணர்ந்துஅந்த ஓர்மையோடு பாட்டு இசைக்கிறார்கள் என்று சொல்ல வேண்டும். இந்த ஓர்மையில் பெருமளவு தெளிவுபெற்றவராக விளங்குபவர் ஈழநாட்டு 'மகாகவி' உருத்திரமூர்த்தி;

'இன்னவைதாம் கவி எழுத ஏற்ற பொருள் என்று, பிறர் சொன்னவற்றை நீர் திருப்பிச்சொல்லாதீர்! சோலை, கடல், மின்னல், முகில், தென்றலினை மறவுங்கள்! மீந்திருக்கும் இன்னல், உழைப்பு, ஏழ்மை உயர்வு என்பவற்றைப் பாடுங்கள்' என்று இருபது வருடங்களுக்கு முன் மகாகவி எழுதினார். நிகழ்காலச் செய்திகளையும், பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும் என்று மிகச் சமீபத்திலும் அவர் எழுதினார். "இன்றைய காலத்திருக்கும் மனிதர்கள், இன்றைய காலத்தியங்கும் நோக்குகள், இன்றைய காலத்து இழுப்புகள் எதிர்ப்புகள், இன்றைய காலத்து இக்கட்டுகள்" ஆகியவையே கவிதையில் இடம்பெற வேண்டும் என்று அவர் சொன்னார்.'

"கவிதையிடம் மக்கள் வரவில்லையே" என்று ஏங்கும் கவிஞர்கள், மக்களின் சிந்தனைக்கு எட்டாத அல்லது அவர்களின் வாழ்வோடு எந்தத் தொடர்பும் இல்லாத நோக்குகளைப்பாடிக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த உண்மையைப் புரிந்து கொண்டு, மகாகவி எவ்வளவு தூரம் மக்களுடன் நெருங்கி வந்தார் என்பதை "நேர்மை" என்னும் அவருடைய கவிதை விளக்குகிறது:

### நேர்மை

வசுவிலே பயணச்சீட்டுக் கொடுத்த வசு நடத்துனர், சீட்டு வாங்கியவருக்குச்சேர வேண்டியதிலும் சற்றே அதிகமான சில்லறையைக் கொடுத்துவிடுகிறார். அதைப் பார்த்ததும் மிகுதிச் சில்லறையைத் திருப்பித் தந்துவிடவே இவர் மனம் எழுகிறது. கூடவே, அந்த எண்ணத்தை அமுக்கி விட்டு, அவருடைய வறிய உள்ளம், "வீட்டுக்குச் சென்றதும் என் இளைய குழந்தை என் மீதில் கால்பிடித்து ஏறுங்கால், இன்றென்றாலும், அதன் கையிலே பழம் ஒன்றை இட்டு இன்பம் ஊட்டிடவாகுமே!" என்று தயங்குகிறது. இறுதியில், "நேர்மை எவர்க்குமே கட்டுமா நண்ப? — கசற்றவர்கள் நாம்!" என்று அவர் கேட்கும்போது, ஓர் ஏழையின் நெஞ்சில் நேர்மைக்காக நடக்கும் பெரிய போராட்டமும் அதன் விளைவும் யாருக்கும் எளிதே விளங்குகின்றன எடுத்துச் சொன்ன நிகழ்ச்சி இன்றைய வாழ்வில் சாதாரண நிகழ்ச்சியாதலால், பாட்டின் சொற்களையும் மீறிக்கொண்டு அதன் இலக்கியப் பயன் எல்லோருடைய நெஞ்சிலும் ஏறி விடுகிறது.

தமிழ்ச் சிறுகதையில் ஏற்பட்ட இந்தப் புதுமையைப் பின்வருமாறு சொல்லியுள்ளார் புதுமைப்பித்தன், "மனிதனின் சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிப்பதற்கு வெகுகாலம் சென்றது. தமிழிற்கே விமோசனம் கிடையாது" என்று நினைத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் வெள்ளி முளைத்தாற் போல் சில கதை எழுதுகிறவர்கள் தோன்றியிருக்கிறார்கள் ..."

பொருட் புதுமையால் சிறுகதைக்குக் கிடைத்த இந்த எளிமை தமிழ்க் கவிதைக்கு அவ்வளவு எளிதிலோ விரைவிலோ கிட்டவில்லை!" தனி வடிவங்களை நிறைந்த, நாவல் ஆகியன தன்னகரிப் பொருளை மையாகக் [illegible] வேலை கவிதை மட்டும் பழைய பொருள் மரபைப் பற்றியே சுழன்றமையால் அருகிவரும் கலை எனக் கருதுமாறாயிற்று. நிகழ்காலச் செய்திகளையும் பிரச்சினைகளையும் கவிதையில் ஆண்டு அதனை இன்றைய யுகத்துக்கு இழுத்துவரல் அவசியமாகும்." இப்படிச் சொல்லியிருப்பவர் மகாகவியே.

### குறும்பா

இந்தத் தெளிவு இருந்ததாலேயே, இக்காலத்தின

(6-ம் பக்கம் பார்க்க)

## சிந்தனையின் சிறகடிப்பில்....

—அ. புராந்தகன்—

சிந்தனையின் சிறகடிப்பு!—
எங்கெங் கெல்லோ சென்றுவிட
என் கண்ணைத் திறக்கின்றேன்—
ஒரு தமிழ் வானம்—
ஒரு தமிழ்ப் பூமி—
என்முன் தெரிகிறது
இருண்டு விட்ட தமிழ் வானில்
உதிக்கின்ற சூரியனின்
ஜொலிக்கின்ற பேரழகில்
ஒளிக்கீற்று தெரிகிறது!...
ஆம்!
தமிழ் வானம் வெளுக்கிறது
இத்தனை நேரமும்
தூங்கிய தமிழர்
துயில் பெற் றெழுந்தனர்
இத்தனை காலமும்
இளைத்திளை வீற்ற
ஓரிரு தமிழர்கள்
தூண்டிற் புழுக்களாய்...
துண்டுப் பல்லியாய்...
துடித்துப் பதைத்தனர்
சோலையின் தாமரையும்
முளையவிழ்ந்து சிரிக்கிறது
பல்வீர்த் துளிகளாய்
அன்னைத் தமிழின்
கண்ணீரில் நனைந்த
கண்ணீர்த் துளிகளும்
அற்றே போயின...!
சுதந்திரக் கன்னியை
சுவைத்திடப் பெரும்
மகிழ்ச்சிப் பெருக்கில்
செந்தமிழ்க் கன்னியர்
சிட்டுக்குருவியாய்க்
கீதமிசைத்தனர்...
நானும் கூட—
எனது கடமையை
எண்ணிப்பார்க்கிறேன்
ஆனால்—
சிந்தனையின் சிறகொடித்து
மீண்டும் நான்,
நினைவலை நாடுகின்றேன்

# எல்லாம் தமிழிற் செய்தே நம் வாழ்வாம் தமிழைக் காக்கும் தொண்டன்!

## மாதோட்டச் சிங்கம் ஜோன் மார்க்! மன்னார் மக்களின் தலைவன் அவனே!



அன்று இரவு 10 மணி இருக்கும். நான் அவசரம் அவசரமாக திரு. ஜோன் மார்க் அவர்களைச் சந்திக்கச் சென்றேன்; அங்கு பலர் திருந்லைதயில் உறங்கினர். நான் எங்கோ சத்திரத்திற்கு தான் வந்துவிட்டேனு என எண்ணி திரும்ப படலைக்குச் சென்று வீட்டை நோக்கிப் பார்த்தேன்; அது ஜோன் மார்க்கின் வீடேதான்.

நான் மின்சார மணியின் சுவிச்சைத் தட்டியதும் உள்ளேயிருந்து ஜோன் மார்க் அவர்களே காட்சி தந்தார்கள். அவருக்கு வணக்கம் தெரிவித்து, இவர்கள் யார்? உங்கள் வீட்டில் விசேசமோ என வினவினேன். 'இவர்கள் மாதோட்டம், முசலி பகுதிகளிலிருந்து வந்தவர்கள். இங்குதான் தங்கிச் செல்லுவார்கள். இது மக்களின் வீடுதானே — எல்லோரும் வரலாம் போகலாம்' எனக்கூறி முடித்தார்.

'நான் வங்காலையை முன்னேற்றிவிட்டேன். இப்பொழுது மன்னார் தொகுதியை முன்னேற்றவேண்டும். நான் தமிழுக்காகவும், மன்னார் மக்களுக்காகவும் எனது உயிரையும் கொடுப்பேன' என ஆவேசக் குரல் எழுப்பினர். மாதோட்ட மக்கள் அவரை அன்புடன் 'மாதோட்ட சிங்கம்' என அழைப்பார்கள்.

1951ம் ஆண்டு ஐக்கிய தேசிய கட்சியில் சுகாதார அமைச்சராக இருந்த கௌரவ திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் மன்னார் தொகுதியைப் பார்வையிட வந்தார். 1948ம் ஆண்டு சுதந்திரம் அடைந்த இலங்கைமக்களின் ஒரு பகுதியினராகிய தமிழர் தங்களுக்கும் இந்நாட்டில் சமபங்கு கிடைக்குமென எண்ணி அமைச்சர் பண்டாரநாயகா அவர்களை கோலாகலமாக மன்னாரில் வரவேற்றனர்.

மன்னார் தொகுதிக்கு எதைச் செய்யலாமெனச் சதா சிந்தித்துக் கொண்டிருக்கும் டாக்டர் ஜோன் மார்க் அவர்கள், தானும் ஒரு மகஜரை அமைச்சரிடம் சமர்ப்பித்தார். அது ஒரு புரட்சிகரமான மகஜராகவே அமைந்தது. அம்மகஜரே திரு. பண்டாரநாயகா அவர்களை மக்கள் விரும்பும் தலைவராக மாற்றியது.

அந்த மகஜருக்கு பதிலளித்த அமைச்சர் அவர்கள் பின்வருமாறு கூறினார்கள்

**கொடிதோர் இராசரத்தினம்**

(கற்குடந்தகுளம்—முருங்கன்)

"உண்மையாக ஜோன் மார்க் கூறுவது போன்று ஆயுர்வேத வைத்தியம் ஆங்கில வைத்தியத்தைப் போன்று சிறந்தது. அவர் கேட்டுக் கொண்டதன்படி ஒவ்வொரு கிராமச் சபையிலும் நான் ஒரு ஆயுர்வேத வைத்தியசாலையைத் திறக்கப்போகின்றேன் திரு. ஜோன் மார்க் அவர்கள் மன்னாருக்கு ஒருஒளியாகும்" (Light of Mannar Mr. Mark.)

வைத்திய ஆச்சாரி எஸ். ஜோன் மார்க் ஜே.பி. அவர்கள் 1951—57 இடைப்பட்ட காலத்திலே "வானொலி வைத்தியர்" என்னும் விடயமாக வானொலியில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார்கள். அவர் மன்னார் மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தின் தலைவரும், அகில இலங்கை சித்த ஆயுள்வேத சங்கத்தின் உபதலைவருமாவார்.

அவர் ஏழைகளின் நண்பன் அவரிடம் வரும் நோயாளிகள் இலவசமாக வைத்திய உதவியைப் பெற்றே செல்வார்கள். அவரை வைத்தியப் பெட்டியுடன் மன்னார் மாவட்டத்தில் எல்லாப் பகுதிகளிலும் காணலாம். அதனால் அவர் 'நடமாடும் வைத்தியசாலை' என அழைக்கப்பட்டார்; அவர் கடந்த 39 வருடங்களாக இந்த சேவையை மக்களுக்குச் செய்து வருகின்றார்.

1941 — 1967 மட்டும் ஒன்பது முறை வங்காலை கிராமச் சங்கத்தின் தலைவராக (25 வருடங்கள்) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 1951—1963 மட்டும் மன்னார் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத் தலைவராகக் கடமையாற்றியுள்ளார். 1952—1963 மட்டும் மன்னார், முல்லைத்தீவு—வவுனியா சனசமூக நிலைய சமாசத்தின் தலைவராகச் செயலாற்றினார்.

அவர் மன்னார் மாவாட்டத்தில் 60 சனசமூக நிலையங்களை ஆரம்பித்துள்ளார். கிராமச் சபைகளின் சமாசத்தை மன்னார் மாவட்டத்தில் ஆரம்பித்தவர் அவரே யாகும். அகில இலங்கை கிராமச் சபைத் தலைவர்களின் சமாசத்திற்கு காலஞ்சென்ற பண்டாரநாயகா தலைவராக இருந்த சமயத்தில் டாக்டர் ஜோன் மார்க் அவர்கள் உபதலைவராக செயலாற்றினார்கள்.

1949ம் ஆண்டு அவருக்குச் சமாதான நீதிவான் பட்டம் கிடைத்தது. அக்காலத்தில் புரக்டர், அப்புக்காத்து மார்களுக்கு மட்டுமே இப்பட்டம் கொடுக்கப்பட்டது. டாக்டர் ஜோன் மார்க் அவர்களே முதன்முதலாக வேறு தொழில்கள் செய்பவர்கள் மத்தியில் இப்பட்டத்தை பெற்றவராகும்.

அவர் வங்காலையில் கிராமச் சங்கத் தலைவராக கடமையாற்றிய காலத்தில் அச்சிறிய கிராமத்திற்கு தனி மின்சாரத் திட்டத்தையே ஆரம்பித்தார். வங்காலையில் ஏழைகளுக்கு வீடுகளும், நல்ல பாதைகளையும் அமைத்துக் கொடுத்தார். இன்று வங்காலை மக்கள் கல்வியிலும், பொருளாதாரத் துறையிலும் உயர் நிலை அடைந்திருப்பதற்கு டாக்டர் ஜோன் மார்க் அவர்களின் சேவையே முக்கிய காரணமாகும்.

இவர் அகில இந்தியத் தலைவர் காமராஜர், தமிழ் நாட்டுத் தலைவா கருணாநிதி, மா. பொ. சி, காலஞ்சென்ற அமரர் வன்னியர், கா. பொ. இரத்தினம் போன்று தனித் தமிழிலேதனது கருமங்களை ஆற்றுபவர். தமிழ் அரசுக்கட்சியின்வேட்பாளர்போட்டியில் மன்னார்மக்களின் அன்புத் தலைவன் எனத் திகழ்விடப்பட்டவர். தமிழ் அரசுக் கட்சியின் தனிப் பக்தன். அவரது உள்ளத்திலெழுந்த தமிழ் தாகத்தின் காரணமாகச் சத்தியாகிரகத்தில் பங்குபற்றியவர்சிலாபத்துறையிலிருந்து அவரது தலைமையில் 251 பேர் துவிச்சக்கர வண்டிகளில் கறுப்புக்கொடிகளைக் கட்டி தமிழர்களுடைய பரிதாப நிலையை மக்களுக்கு எடுத்துக் காட்டியவர்.

அவர் சுயேச்சையாகப் போட்டியிட்ட சமயங்களில் தமிழ் அரசுக் கட்சியைத் தாக்காமல் அக்கட்சியின் சேவைகளைப் புகழ்ந்து மக்களின் ஆதரவைப் பெற்றவர். அதனால் அவரது எழுச்சி தமிழ் மக்களின் எழுச்சியே யாகும்.

இந்தியாவிலிருந்து வந்த வெள்ளைப் புலவர் ஓமக்குழி வளர்த்த தனது தியானத்தால் வங்காலையை உலகறியச் செய்தார். வங்காலையில் பரதக்குலத் தலைவனாகிய டாக்டர் ஜோன் மார்க்கை மன்னார் மாவட்ட மக்கள் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொண்டமைக்கு பரதகுல மக்களின் திறமையும், ஒற்றுமையுமே முக்கிய காரணமாகும். வெள்ளைப் புலவரின் பக்தனாகிய டாக்டர் ஜோன் மார்க் விரைவில் தமிழர்களின் தலைவனாகி, கம்பீரமாகத் தமிழ் அரசுக் கட்சியின் கொடியைப் பறக்கவிடுவார்.

## நிதி அனுப்ப வேண்டிய முகவரி

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையும் கொழும்புத் தமிழ்ச்சங்கமும் கூட்டாக, தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் சம்பவங்களின் போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு நிதியை திரட்டிவருகிறது. இந்த நிதியை ராமகிருஷ்ண மிசன் மண்டபத்தில் 13—1—74ல் நடைபெற்ற கூட்டத்தில் தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் ஆர். கே. சேத். தொடக்கி வைத்தது தெரிந்ததே.

இந்நிதிக்கு உதவி செய்ய விரும்புபவர்கள், அதனைப் பின்வரும் முகவரிக்கு அனுப்பலாம். பேராசிரியர் அ. சின்னத்தம்பி, 70/3, வாட் பிளேஸ், கொழும்பு—7.

---

# எளியநடைக் கவிதையும்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அன்றுடப் பழகு பொருள் களாகிய தீலை, செய்மலர் குப்பைத் தொட்டி ஒளி காட்டி (Traffic Light) முதலியவற்றை எல்லாம் பாடுபொருளாக்கினார் மகாகவி. அவருடைய குறும்பா இக்காலத்தில் விஞ்சிநிற்கும் வரதட்சணை என்னும் மாப்பிள்ளை விலைக் கொடுமையையும், வையூட்டு என்னும் லஞ்ச ஊழலையும் அணுகுண்டு அபாயத்தையும் இவை போன்ற வேறு தற்காலப் பொருள்கள் கருத்துக்களையும் பற்றிப் படர்ந்துள்ளது:

மகாகவியின் பாடுபொருள் காலத்தை ஒட்டியதாகவும் இன்றைய மனிதனின் வாழ்வை நோக்கை அனுசரித்ததாகவும் அமைந்ததால் தமிழ்க் கவிதைக்கு ஓர் அருமையான எளியநடை கிடைத்தது என்பதற்கு அவருடைய "ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்" சரியான எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

இந்தக் கவிதைக் கதை இன்றைய நடுத்தர வகுப்பு மனிதனின் வாழ்வை அடித்தளமாகக் கொண்டது; புதுமைப்பித்தன்சொன்னது போல, "அவனுடைய(பெருமைகளை மட்டுமல்லாமல்) சிறுமைகளை, தப்பிதங்களை, அதில் அவன் நாடும் வெற்றியை இலக்கியமாகச் சிருஷ்டிக்கின்றது." இதைப் படிக்கின்ற யாருக்கும் விளங்காத செய்தி என்றோ, புரியாத நடை என்றோ சொல்ல ஒன்றே எதுவும் இல்லை; மாறாக, தங்கள் அன்றுட வாழ்வின் அனுபவங்களே பாட்டாகி யிருப்பதைக் கண்டு, எல்லோருமே அதிலே ஓர் ஆர்வம் கொள்வார்கள்.

### எளிய நடை இலக்கியம்

எந்த மனிதனும், தன்னைப் பாராட்டிச் சொல்வதைக் கேட்டு மகிழ்கிறான்; தன்னைப் பழித்துப் பேசினால் உளைகிறான். ஆனால், தன்னையும் தன் தொடர்பானவைகளையும் புறக்கணிக்கிறார்கள் அல்லது இருட்டடிப்புச்செய்கிறார்கள் என்று தெரிந்தால் வெறுப்பும் கோபமுமே அடைகிறான். மனிதனின் இந்த அடிப்படை இயல்பைப் புரிந்துகொண்டு, இன்றைய இலக்கியம் அவனையும் அவனுடைய வாழ்வையுமே பேசுவதால், அதன் மீது அவனுக்கு ஓர் ஆர்வம் ஏற்படுகிறது. அதன் காரணமாக அந்த இலக்கியமே அவனுக்கு எளியநடை இலக்கியமாகத் தோன்றுகிறது.

தன்னைப் பற்றி மற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டும் என்று பொதுப்பட விரும்புவதோடு, தனது போக்கையும் தனக்குத் தேவையானதையும் சரிவர உணர்ந்து பேசுகிறவர்களிடம், எந்த மனிதனும் தனிப்பட்ட அன்பு வைக்கிறான். பாரதி தமது காலத்தில் பொங்கிய தேசிய ஆர்வத்தைச்சுட்டிக்குறித்துப்பாடிய எளியநடையாளர் என்று பெயர் பெற்றார்; பாரதிதாசன், அவர் காலத்திய தமிழ்த் தேசிய உணர்வுக்கும் தொழிலாளர் சார்பான எண்ணங்களுக்கும் உருக்கொடுத்து எளியநடைக் கவிஞர் என்று புகழ் பெற்றார்.

இன்று வாழும் கவிஞர்களிலே பலர், இன்றைய மனிதனின் இலக்கு எது என்று தெரியாததாலேயே அவனிடமிருந்து விலகி நிற்கிறார்கள். "ஒரு சாதாரண மனிதனது சரிதிரத்தில்" இன்றையப் பெரும்பாலான மனிதர்களின் மன ஓட்டத்தைச் சரியாகச் சுட்டிக் குறித்ததன் மூலம் எளியநடைக் கவிஞராக விளங்குகிறார் மகாகவி

### மக்கள் கவிதை

அறிவியலின் பல சவுகரியங்களை அனுபவிக்கின்ற இன்றைய மனிதன், அதன் தவிர்க்க முடியாத தீய விளைவுகளையும் ஏற்க வேண்டியவனாகவே உள்ளான்; இந்த நிலையைக் கண்டு, சிலர், "காலம் கெட்டுப் போய் விட்டது" என்று வாடிச் சாம்புகிறார்கள். ஆனால், பெரும்பான்மையான மக்கள், வாழ்வின் மீதும் தங்கள் ஆற்றலின் மீதும் நம்பிக்கை வைத்து, ஒருவிதமான தளரா முனைவுடனேயே மேற்செல்லுகிறார்கள். வாழ்விலே தோல்விகள் உண்டென்றாலும், தங்கள்வாழ்வு "மேட்டைக் கண்டு துளைத்துப் புகுந்தது, — வெள்ளம் கண்டு வளைத்துக் கடந்தது" என்ற உணர்வே அவர்களிடம் மேலோங்கி நிற்கிறது. இந்த உணர்வைத்தொட்டுக் காட்டும் மகாகவியின் கவிதை அவர்களுக்கு உவப்பாகவும் எளியதாகவும் தோன்றுவதில் வியப்பில்லை.

நீண்ட காலமாகவே தமிழ்க்கவிதை மக்களின் வாழ்வை விட்டு விலகிப் போய்விட்டது. போய் விடவே, கவிதைச் சுவைப்பு என்பது ஒருசிலரின் பொழுது போக்கு என்ற ஒருநோக்கு உருவாயிற்று. ஆகவே, கவிதையானது, மக்களுக்குத் தெரியாததும் தேவையில்லாததும் (சிலபோது அவர்களையே பழிப்பதும்) ஆன தடங்களில் நடைபயிலத் தொடங்கியது. அந்த நிலையில் மக்களிடையே வழங்கும் மொழியோ, மொழித் தோரணைகளோ (Modes of Expression) கவிதையில் இடம் பெறவில்லை. அவை இடம் பெறவில்லையாகவே, கவிதைச் சுவைப்பு என்பது, மக்களுக்கு விளங்காத (அயல் மொழிப் பாட்டுக் கேட்பது போன்ற) ஒரு தொழில் ஆயிற்று. அதனால்தான் தமிழர்களே, "தமிழ்க் கவிதை கடுநடையில் உள்ளது, எளிய நடையில் இயன்றால் நல்லது" என்று உணரத் தலைப்பட்டார்கள்.

### மகாகவி அடைந்த வெற்றி

பாரதியும் பாரதிதாசனும் இந்த உணர்வின் விடிவுக் காலத்தவர்கள்: பாட்டில் எளியநடை என்ற தத்துவத்தின் ஒரு பகுதியை மட்டுமே அவர்கள் அறிந்து வலியுறுத்தினார்கள். அதன் வளர்ச்சியும் தவிர்க்க முடியாத தொடர் விளைவுமான பொருள் எளிமை (அல்லது கருத்து எளிமை) என்னும் அம்சத்துக்கு வடிவம் கொடுத்தவர்களுள் மகாகவி சிறந்தவராக விளங்குகிறார். இந்தச் சிறப்பு தற்செயலாக அமைந்ததன்று; முழு ஓர்மையோடு கவிதைத் துறையில் அவர் நிகழ்த்திய சோதனைகளுக்குக் கிடைத்த வெற்றி அது.

'கட்டித்தசித்தனை உடைய பண்டிதர்களும், கோட்பாடுகளை விழுங்கி விட்டுச் செமித்துக் கொள்ள முடியாதவர்களும், மோப்பதற்கும் மோந்து முணுமுணுப்பதற்குமாக எழுதப்படுவதன்று கவிதை; அது சாதாரண மனிதனின் பழுதுபடா உள்ளத்திற் பாயப் பிறப்பது' என்று ஓரிடத்தில், தமது நோக்கைத் தெளிவுபடுத்துகிறார் மகாகவி. இதில் முதலில் குறிக்கப்பட்டவர்கள் செயற்கை மனிதர்கள்; அவர்கள் தங்களுக்கு விளங்காததையும் விளங்கி விட்டதாக நடிப்பார்கள். சாதாரண மனிதன் நடிப்புப் பயிலாதவன். அவன் தனக்குப் புரிந்ததையே சுவைப்பான். அவனுக்குப் புரியாமல் போய் விட்ட கவிதைப் பொருளை அவனுக்கு மிக அணுக்கமானதாகக் கொண்டு வந்ததே எளியநடைக் கவிதைக்கு மகாகவி செய்த பணி அதுவே எளியநடைக்கவிதையாக்கத்தில் ஒரு கணிசமான பணி.

# மட்டுநகரில் பாடசாலைப் பகிஷ்கரிப்பு

# பூரண வெற்றி!

## அரசடிப்பிள்ளையார் கோவிலடியில் இளைஞர்கள் உண்ணாவிரதம்

## பகிஷ்கரிப்புத் துண்டுப் பிரசுரம் கொடுத்த இரு தமிழ் இளைஞர்கள் கைதாகினர்!

தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளில் தமிழ் மக்கள் மீது நடைபெற்ற பொலிஸ் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்தும், அச்சம்பவங்களின் போது காலமான தமிழ்த்தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்தும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவையினர், இம்மாதம் முதலாம் திகதி ஏற்பாடு செய்திருந்த பாடசாலைப் பகிஷ்கரிப்பு மாணவ மாணவியரினதும் பெற்றோர்களினதும் பூரண ஒத்துழைப்பை பெற்றுப் பெரு வெற்றியை யீட்டியது.

அன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மட்டக்களப்பு அரசடிச்சந்திப் பிள்ளையார் ஆலய முன்றலில் இளைஞர் பேரவையினர், ஏறாவூர் தெற்கு கி. ச. தலைவர் திரு. இ. ஆலாலசுந்தரம் தலைமையில் நடத்திய உண்ணாவிரதத்திலும் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர். இந்த உண்ணாவிரதத்தை முன்னாள் தலைவர் உறுப்பினர் திரு. மு. மாணிக்கம் காலையில் ஆரம்பித்து வைத்தார். முன்னாள் பட்டிருப்பு பா. உ. திரு. சி. மு. இராசமாணிக்கம் உண்ணாவிரதத்தை பழரசம் வழங்கி மாலையில் முடித்து வைத்தார். அத்துடன் உண்ணாவிரதத்தில் தாமும் சில மணி நேரம் கலந்துகொண்டார்.

நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்பு, உண்ணாவிரதம் பற்றிய துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துக்கொண்டிருந்த போது, கல்முனையைச் சேர்ந்த இரு மானத்தமிழ் இளைஞர்கள் — கதிரமலை இளையகுமார், அருளையா குணசீலன் ஆகியோர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு பிணை வழங்கவும் மறுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைப் பகிஷ்கரிப்பு நடைபெற்ற அன்று மட்டக்களப்பு கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி மாணவர்களிலும் அரைவாசிக்கு மேற்பட்டோர் பகிஷ்காரம் செய்தனர். இதனால் பாடசாலை சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இ. போ. ச. பஸ்களும் காலியாகவே ஓடிக்கொண்டிருந்தன. பாடசாலையை பகிஷ்கரித்த மாணவர்கள் கோவில்களுக்குச் சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

வாந்தாறுமூலை, கொம்மாதுறை, சித்தாண்டி, முறக்கொட்டாஞ்சேனை, இராள் ஆகிய இடங்களிலுள்ள பாடசாலைகளில் பெரும்பான்மையான மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவில்லை.

மட்டக்களப்பு கல்வி வட்டாரத்திலும், கல்குடா தொகுதியிலும் மிக முக்கியமான வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலயம் நேற்று வெறிச்சோடிக் கிடந்தது. அங்கு கடமையாற்றும் ஆசிரியர், ஆசிரியைகளை தவிர மாணவ மாணவிகள் எவருமே சமூகமளித்திருக்கவில்லை. விடுதியிலுள்ள மாணவ மாணவிகள் கூட பாடசாலைக்குச் செல்லாது விடுதியிலேயே தங்கியிருந்தனர்.

திரு. சி. மு. இராசமாணிக்கம் உண்ணாவிரதக் கருத்தரங்குக்கு தலைமை வகித்துப்பேசுகையில் கூறியதாவது:-

நாட்டில் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக அரசியல் நெருக்கடி என்றும் பொருளாதார நெருக்கடி என்றும் பல நெருக்கடிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையில் பேச்சுச் சுதந்திரத்துக்கும் கூட்டம் கூடும் சுதந்திரத்துக்கும் ஆபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. உலகத் தமிழ் அறிஞர்களைக் கண்டுகளிக்க யாழ் நகரில் கூடிய பல்லாயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் மீது எவ்வித எச்சரிக்கையுமின்றிப் பொலிசார் தாக்கியமை இதற்கு ஓர் உதாரணமாகும். இச்செயல் தமிழர்களின் உள்ளமெல்லாம் ஆறாப் புண்ணை ஏற்படுத்திவிட்டதை இன்று இழக்கிலங்கையில் நடைபெற்ற பாடசாலைப் பகிஷ்கரிப்பு எடுத்துக்காட்டியிருக்கிறது.

அரசாங்கம் தமிழாராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதங்கள் சம்பந்தமாக ஒரு பகிரங்கவிசாரணைக்குழுவை அமைத்து இருக்கவேண்டும். அரசாங்கம் இந்தக் கடமையிலிருந்து தவறியமையினால் யாழ்ப்பாணப் பொது மக்கள் ஒரு பொது விசாரணைக் குழுவை இதற்காக நியமிக்க வேண்டி நேர்ந்தது. இக்குழுவின் விசாரணை அறிக்கை பகிரங்கப் படுத்தப் பட்டு தமிழ் மக்களுக்கு நேர்ந்த கதியை உலகெல்லாம் அறிவிக்கவேண்டும்.'

## யப்பாவ்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

உன்னை மீண்டும் மேயராக்கினர்! நீயோ, இன்று தமிழர்கள் தலையில் கல்லைப் போட்டு, வாயில் மண்ணைப் போட்டு உரிமைகளைத் தாரை வார்த்துவிட்டு நிற்கிறாய்!

அது சரி, நீ ஏனப்பா தமிழ் நாட்டுக்குப் போகிறாய்? அதுவும் அடிக்கடி போகிறாய்? நாஸ்திகர் சிதம்பரம்போவது மாதிரி, யூதர்கள் மெக்காவுக்குப்போவது மாதிரி!

ஒன்பதாம் தேதி நீ ஒரு விருந்து கொடுத்தாய், மாநாட்டுக்கு வந்த அறிஞர்களுக்கு! பலர் அதைப் பகிஷ்கரித்தார்கள். ஈழத் தமிழரின் உணர்ச்சிகளை அவர்கள் புரிந்து மதிப்பளித்த காரணத்தால்தான், அங்ஙனம் அவர்கள் பகிஷ்கரித்தனர்.

ஆனால் பத்தாம் திகதி இரவு கொடுபட்ட விருந்தைப் பகிஷ்கரிக்க முடியவில்லையே!

இன்று நீயும் நீலிக்கண்ணீர் வடிக்கிறாய்! 'விசாரணை செய்யுங்கள்' அப்படி, இப்படி என்று சொல்கிறாய்! யாருக்கு விடுகிறாய் ரீப்பு?

11ம் திகதி காலை யாழ் நகரமே சோபையிழந்து அநுமான் எரித்த இலங்கைபோல் கிடந்த சமயம், யாழ் நகரின் கடைகள் அனைத்தும் பூட்டப்பட்டுக் கிடந்த பொழுது, நீ மாநகரக் கூட்டுறவுச் சங்கக் கடைகளைப் பூட்ட மறுத்தாய். பட்டப் பகலில் விருப்பு வெறுப்பு அதிகரித்து வந்தது கண்டு அதிர்ந்துபோய் மாலையில் பூட்டினாய்.

தமிழன் செத்த வீட்டிலும் வியாபாரம் செய்தவன் நீ!

இன்றோ பூட்டிய அறைக்குள் இருந்து கொண்டு அறிக்கை விடுகிறாய் அறிக்கை!

யாருக்கு வேண்டும் உன் விளக்கம்?

யார் கேட்டது உன் அறிக்கையை?

—சிவா.

## அடுத்த இதழ்

மன்னார் இடைத் தேர்தல் பிரச்சார செய்திகளைத் தாங்கி வெளிவருகிறது.—ஆர்

## பொலீஸ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டும் பொறுப்புடைய பொலிசார் அவற்றுக்கு ஒத்துழைப்பு நல்கியதையும், சட்டத்தையும், ஒழுங்கையும் மீறிய மக்கள் செயலை அடிப்படை சனநாயக உரிமையென பிரதமர் வருணித்ததையும் இந்நாட்டுத் தமிழ் மக்கள் அவ்வளவு கெதியில் மறந்துவிடவில்லை என்பதையும் சுட்டிக் காட்டுவதுடன்,

பொலிசார் தமிழ் மக்கள் மீது புரிந்த மிருகத்தனமான வன்செயல்களை கண்டு அரசாங்கம் வாழாதிருப்பது தமிழ் மக்களை அரசாங்கம் மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடத்துவதென்பதை மென்மேலும் உறுதிப்படுத்தப்படுவதனால் ஈழம் வாழ் தமிழ் தேசிய இனம் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்னும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர், என்று வலியுறுத்திக் கூறுகின்றது.

## அனுதாபம்!

சுதந்திரன் பத்திரிகையை வெளியிட்டு வரும் இலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தின் முன்னாள் இயக்குனர்களில் ஒருவரான காலஞ்சென்ற வழக்கறிஞர் வே. சி. சிற்றம்பலத்தின் வாழ்க்கைத்துணைவியார் திருமதி சற்குணம் சிற்றம்பலம் காலமாகி விட்டதறிந்து வருந்துகிறோம். அவரது குடும்பத்தினருக்கு சுதந்திரன் ஸ்தாபனம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

— நிர்வாகி

## வீரகேசரியும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கியத்தை வீரகேசரியால் மறுக்கமுடியுமா?

சனவரி 10ம் திகதி சம்பவங்களையிட்டு, தனக்கு தெரியாமல் எந்தச் செய்தியும் பிரசுரிக்கக்கூடாது என அன்றிரவே ஒரு தமிழ் நாளேட்டுக்கு அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் உத்தரவிட்டிருந்தார் என்று சொல்லப்பட்ட சம்பவம் வீரகேசரிக்கு தெரியுமா?

கலாநிதி வித்தியானந்தன் அனுப்பியுள்ள அறிக்கையை வீரகேசரி, எவ்வித வெட்டுக் கொத்தும் இல்லாமல் பிரசுரித்ததாக தம்பட்டமடிக்கும் வீரகேசரியார்-யாழ் மேயருக்குப் பதிலளித்து, வித்தியானந்தன் வெளியிட்ட அறிக்கையில், "செருமானிய தேசத்து பிரதிநிதி ஒருவர் எங்கள் மேயரை நாதனை மேயர் "Funny Mayor என்று அழைத்ததில் என்ன வியப்பு? என்று குறிப்பிட்டிருந்த பகுதியை பிரசுரிக்காமல் விழுங்கி ஏப்பம் விட்டது ஏன்?

இரா: சனார்த்தனமும், இந்தியத் தமிழ்ப் பத்திரிகைகளும் ஆராய்ந்தறியாமல் பொய் சொல்லுவதாக கூறும் 'வீரகேசரி' - தன்னுடைய இதழிலும், தனது சகோதர ஏடான மித்திரனிலும், இரா. சனார்த்தனத்தை பொலிசார் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்து கொழும்புக்கு கொண்டுவந்து நாடுகடத்தினர் என்ற முழுப் பொய்ச்செய்தியொன்றை — ஆராய்ந்தறியாது—பெட்டிகட்டி முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்ததேன்? மக்களிடம் பரபரப்பு ஏற்படுத்தி பத்திரிகை விற்பனையைப் பெருக்குவதற்காகவா?

எனவே, வீரகேசரியிடம் சகோதரவாஞ்சையுடன் கூறுகிறோம்—ஒருசில அமைச்சர்களை திருப்திப்படுத்துதற்காக — இந்திய விரோதி போல காட்ட முனைந்து — தேவையில்லாது பேனையை கண்டபடி ஓட்டி, தமிழ் மக்களிடையே இருக்கின்ற மதிப்பை அழித்துவிடமுனைய வேண்டாம்!

## தமிழ் ஈழம் முழுவதும் பூரண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுகல்

இதே வேளையில் இறந்த தமிழ்த் தியாகிகளின் நினைவாக "நடுகல்" ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிறுவவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இந்த "நடுகல்" சம்பவம் நடைபெற்ற இடத்திலேயே அமைய வேண்டுமென்பது பெரும்பாலோரின் விருப்பமாக உள்ளது. ஆனால், அரசாங்க உடைமையாக இருக்கும் வீரசிங்க மண்டப வளவுக்குள் இதை உருவாக்க அரசு அனுமதிக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது.

9-2-74ல் தமிழ் ஈழத்தின் பல்வேறு தொகுதிகளிலும் அனுதாபக் கூட்டங்களையும் தமிழர் கூட்டணி நடத்த ஏற்பாடு செய்து வருகிறது. அன்று மாலை யாழ் கோட்டை மைதானத்தில் ஓர் அனுதாபக் கூட்டத்தை நடத்துவதற்கு அனுமதி கோரி பொலீஸ் அதிபரிடம் தமிழர் கூட்டணி விண்ணப்பித்திருந்தது.

பாடசாலைகள் பகிஷ்கரிப்பு

தமிழ் மக்கள் மீது பொலிசார் நடத்திய திட்டமிட்ட வெறித்தாக்குதலுக்கு கடுமையான எதிர்ப்பைக்காட்டு முகமாகவும் இச்சம்பவத்தின்போது இறந்த தமிழ் தியாகிகளுக்கு அனுதாபம் தெரிவித்தும் — பாடசாலைகளையும், கல்லூரிகளையும் பெப்ரவரி 8ந் திகதி வெள்ளிக்கிழமை முற்றாகப் பகிஷ்கரிக்குமாறு தமிழ் இளைஞர் பேரவை தமிழ் மாணவ சமுதாயத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தமிழ் இளைஞர் பேரவையின் ஆணைப்படி, 8-2-74ல் பூரண பாடசாலை பகிஷ்காரத்தை தமிழ் உணர்ச்சிமிக்க தமிழ்மாணவ சமுதாயம் வெற்றிகரமாக செயற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் கூட்டணி செயலாளர் நாயகமும், தமிழரசுக் கட்சி தலைவருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களும் பாடசாலைபகிஷ்கரிப்பு இயக்கத்தில் பூரணமாக ஒத்துழைப்பு நல்குமாறு பெற்றோர்களையும் மாணவர்களையும் கோரியுள்ளார்.

திருகோணமலையில் சவ ஊர்வலம்

தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நடந்த பொலிஸ் தாக்குதலை கண்டிக்கும் பொருட்டு, திருமலை மாவட்டம் முழுவதும் எதிர்வரும் 8ம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் மாலை, யாழ் நகரில் காலமான ஒன்பது பேரையும் நினைவுகூருமுகமாக, 'பிரேத ஊர்வலம்' நடத்தவும் திருமலை தமிழ் இளைஞர் பேரவை முடிவு செய்துள்ளது.

திருமலை, மூதூர் ஆகிய தொகுதிகளில் தமிழ் பேசும் மாணவர்களை, எதிர்வரும் 8ம் திகதி பாடசாலைகளைப் பகிஷ்கரிக்குமாறு, திருமலை தமிழ் இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அத்துடன், அன்று சகல இல்லங்களிலும் கறுப்புக் கொடி பறக்கவிடுவதுடன், கடைகள் யாவும் விடுமுறை நாட்களைப்போன்று மூடப்பட்டிருக்கவேண்டுமென்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

8ம் திகதி மாலை நடைபெறும் பிரேத ஊர்வலம், திருமலை நகரின் குறிப்பிட்ட தொரு இடத்திலிருந்து ஆரம்பமாகும். அது திருமலை மயானபூமியைச் சென்றடையும்.

மாநாட்டின்போது காலமான ஒன்பதுபேரின் ஞாபகார்த்தமாக, ஒரு சவப்பெட்டியை தோழில் சுமந்தவாறு சில இளைஞர்கள் செல்ல, ஊர்வலத்தில் அவர்களது பின்னால் ஏராளமான இளைஞர்களும் பெரியோர்களும் செல்வார்கள். இந்த ஊர்வலம் மிக அமைதியான முறையில் நடைபெறுமென, இளைஞர் பேரவை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

8ம் திகதியன்று பாதையில் நடமாடுவதைப் பொது மக்கள் குறைத்துக்கொள்ள வேண்டுமெனவும் இளைஞர் பேரவை வேண்டியுள்ளது.

"டாம்பீக வாழ்வு கொண்டுவரும் தாழ்வு"

"சிக்கனமே சிறந்த செல்வம்"

சிக்கனத்திற்குக் மில்க்வைற் சலவைப் பவுடர் வாங்கிப் பாவியுங்கள்.

மில்க்வைற் சலவைப்பவுடர் ஒரு பைக்கட் 50 சதம் மட்டுமே.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், தபால் பெட்டி எண் — 77, யாழ்ப்பாணம்.

## சனவரி-10 சம்பவங்கள்

# கிரெட்சர் தலைமையில் விசாரணை ஆரம்பம்!

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னால் சென்ற சனவரி பத்தாம் திகதி நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் பொதுக்கூட்டத்தில் பொதுமக்கள் மீது பொலிசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதல் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் ஆராய்வதற்கு யாழ்ப்பாணப் பொதுமக்களால் நியமிக்கப்பட்ட மூவர் ஆணைக்குழு தனது விசாரணையை 2.2.74 காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நும் ஓய்வுபெற்ற நீதிமன்றச் செயலாளரான திரு. ஆ. வே. வேற்பிள்ளை ஆணைக்குழுவின் அதிகாரப் பத்திரத்தை வாசித்துவிட்டு, அதைக் குழுத்தலைவரிடம் ஒப்படைத்தார்.

ஆணைக்குழுவின் முதலியாராக இளைப்பாறிய உயர்நீதிமன்ற ஊழியரான திரு. அரசரத்தினம் கடமையாற்றினார்.

ஆணைக்குழுவின் முன்பு சாட்சியமளிக்க முன்வருவோரின் நலன்களை கவனிக்கும் பொறுப்பை இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரையும், சட்டத்தரணியும் யாழ்மாநகர

பேராசிரியர் நயினார்முகம்மது தமிழ்மொழியையும், தைப்பொங்கலையும் சம்பந்தப்படுத்திப் பேசிக்கொண்டிருந்தார். சனங்கள் மிக அமைதியாக இருந்து அதனை ரசித்தனர். நான் பல கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். அப்படி அமைதியாக இருந்து சனங்கள் கேட்டு ரசித்த கூட்டத்தை இதுவரை காணவில்லை.

அப்போது கிழக்குப் பக்கமாக ஏதோ ஆரவாரம்கேட்டது. சனங்களை அமைதியாக இருக்குமாறு நயினார் முகம்மது கேட்டுக்கொண்டார். என்ன குழப்பமாக இருக்கலாமென்று அவதா

பொலிஸ் டிரக்கின் பின்கதவு ஒன்று திறந்திருந்தது. அதற்குள் 3, 4 பொலிஸார் இருந்தனர். அவர்கள் திடீரெனக் கீழே குதித்து குண்டாந்தடியாலும், துவக்கின் அடிப்பாகத்தாலும் சனங்களைத் தாக்கினார்கள். அதே சமயம் கூட்டத்திற்குள் பல இடங்களிலும் பொலிஸாரின் தாக்குதல் நடந்தது. அவர்கள் எப்படி அங்கு வந்தனரென்பது எனக்குத் தெரியாது. இச்சம்பவம் நிகழ்வதற்குமுன் அந்த வீதியில் வேறெந்த வாகனமும் வரவில்லை; குழப்பமும் நிகழவில்லை.

### சுட்டனர்

பொலிஸ் டிரக்கிலிருந்து எந்தத் தகவலையாவது ஒலிபரப்பியதை நான் கேட்க

## என்றும்.. நினைவிருக்கும்!

கிரெட்சர்:- சம்பவம் நடைபெற்றபோது அங்குவந்த பொலிசார் அவர்களது ஒலிபெருக்கியில் மக்களை விலகுமாறு சொன்னார்களா?

சாட்சி:- அப்படியொன்றும் சொல்லவில்லை; சொல்லியிருந்தாலும் எங்களுக்கு கேட்டிருக்காது. ஏனெனில் எமக்கு அருகிலுள்ள ஒலிபெருக்கியில் பேச்சைக் கேட்டுக்கொண்டு அதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தோம்.

கிரெட்சர்:— பொலிசாருக்கு போத்தல் அல்லது கற்களை பொது மக்கள் யாரும் வீசினார்களா?

சாட்சி:— இல்லை!

சாட்சியை ஆஜர் செய்த முன்னாள் நீதிபதி எஸ். தம்பித்துரை:— 10ந் திகதி சம்பவம் இப்போதும் ஞாபகமாக இருக்கிறதல்லவா?

சாட்சி:— அந்தச் சம்பவம் இன்று மட்டுமல்ல என்றும் நினைவிருக்கும்.

(2. 2. 74 பாம் கோட்டில் நடைபெற்ற விசாரணையின் போது சாட்சியமளித்த திருமதி மகேஸ்வரி இலட்சுமணனிடம் கேட்கப்பட்ட சிலகேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும்;)

## "பொலிசார் துப்பாக்கியால் சுட்டனர்! பெண்களின் சேலையைப் பிடித்து இழுத்தனர்!

'பாம் கோட்டில்' ஆரம்பித்தது.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர், வணபிதா. திரு. சா. குலேந்திரன் ஆகிய இரு உறுப்பினர்களைக் கொண்ட இக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் திரு. ஓ. எல். டி. கிறெட்சர் கடமையாற்றினார்.

விசாரணைக் குழுவினர் தமது ஆசனங்களில் முதல் நாள் வந்தமர்ந்ததும், குழுச் செயலாளராக கடமையாற் முன்னாள் மேயருமான திரு. எஸ். நாகராசாவும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

முதல்நாள் (2.2.74), திரு. சி. நாகராசா, புங்குடுதீவைச்சேர்ந்த திருமதி மகேஸ்வரி இலட்சுமணன், திரு. சோதிலிங்கம், இளவாலையைச் சேர்ந்த ஆசிரியர் அந்தோனிப்பிள்ளை சந்தியாபிள்ளை திரு. றொபேட் பேரின்பநாயகம் ஆகிய ஐவர் சாட்சியமளித்தனர்.

திரு. சோதிலிங்கம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:-

"...னிக்க அருகே சென்றேன்; பொலிஸ் வாகனம் வந்திருப்பதையும், வீதியை விட்டுச் சனங்கள் விலகுவதையும் கண்டேன்;

இதனால்தான் அங்கு சலசலப்பு ஏற்பட்டிருக்கவேண்டும். வீதியை விட்டு விலகி வாகனத்துக்கு வழிவிடுமாறு சனங்களை நானும் கேட்டேன். சனங்கள் பொலிஸாரைக் கண்டு எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை. அவர்கள் அங்கு ஏன் வந்தனரென்ற பதட்டநிலை காணப்பட்டது?

வில்லை; தாக்குதல் திடீரென ஆரம்பமானது. துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. பொலிசார் சுடுவதை நான் நேரில் கண்டேன். பல தடவை வெடிச்சத்தம் கேட்டது. அவற்றில் 45 தடவை துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததை அவதானித்தேன். இச்சமயத்தில் மின்சாரக்கம்பி அறுந்து தொங்கியதை நான் காணவில்லை.

சிதறி ஓடிக்கொண்டிருந்த பெண்களையும், பிள்ளைகளையும் பொலிசார் துரத்தி, துப்பாக்கியின் அடிப்பாகத்தால் தாக்கினார்கள். ஓடிக்கொண்டிருந்தவர்களின் உடைகளை பொலிசார் பிடித்து இழுத்ததையும் கண்டேன். உடைகள் இதனால் உரிந்து நிலத்தில் விழுந்தன. உள்ளாடையுடனும், மேற்சட்டையுடனும் பலபெண்கள் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருந்தனர்.

பின் பஸ் நிலையத்தில் என்ன நடக்கிறதெனக் காணச்சென்றேன். அங்கும் பொலிசார் சனங்களைத் தாக்கினார்கள். கண்ணீர்ப்புகைக் குண்டுகளும் வெடித்தன அப்போது பஸ்களும் அங்கு நின்றன."

## யப்பாவ்! துரையப்பா! பொத்தப்பா வாயை!! பூட்டப்பா கதவை!!!

'என்ன ஏன் தக்க மரியாதையுடன் தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு அழைக்கவில்லை?'

—இப்படிக் கேட்டவர் யார் தெரியுமா?

சாட்சாத் துரையப்பாவே தான்!

ஓம், 56க்கு முன்பு சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் பதவியுயர்வு உட்பட்ட எந்தத் தேவைக்கும் சிங்களம் படிக்கவேண்டியதில்லை என்ற விதி அமுலில் இருந்தும் நூற்றுக்கணக்கான தமிழரின் பதவியுயர்வை ரத்துச் செய்து சமீபத்தில் பதவி இறக்கம் செய்துள்ள இன்றைய அரசின் வடபிரதேச எடுபிடிதான் இப்படிக் கேட்டிருக்கிறார்.

எதிர்க் கட்சியாயிருந்த சமயம், தமிழினத்துக்கு அற்ப சொற்ப உரிமைகளை வழங்க முயன்ற தமிழ் மொழிப் பிரமாணங்களை மும்முரமாக எதிர்த்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எலும்புண்டு இவர்!

ஒவ்வொன்றுகத் தமிழர் உரிமைகளைப் பறித்த அரசுக்கு சுயநல நோக்கங்களுக்காக தம்பட்டமடிப்பவர் தன்னை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஏன் மரியாதை செய்து அழைக்கவில்லை என்று கேட்டார். என்ன தைரியம்!

திரு. துரையப்பாவுக்கு முதலாவதாகச் சொல்ல விரும்புகிறோம்;

"அண்ணே, மரியாதை என்பது கேட்டுப் பெறுவதற்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் பதவி அல்ல; கேளாமலே அது உனக்குக் கிடைத்திருக்கும். ஆனால் அதற்கு அருகதையற்றவனாக நீ இருக்கிறாய். அதனால்தான் அது உனக்குக் கிடைக்கவில்லை. இந்த உண்மை உன் மூளையில் ஏறவில்லையா?

அரசியலிலே நீ என்றைக்காவது தமிழினத்துக்கு நல்லது செய்யாவிட்டாலும் முட்டுக்கட்டையாவது போடாமல் இருந்திருக்கிறாயா?

தமிழாராய்ச்சி மாநாடு தமிழன் தலைநகரான யாழ்ப்பாணத்திலேதான் நடைபெறவேண்டும் என்று ஈழத் தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு உழைத்தசமயம் அரசுதந்த தொல்லைகள் தலையிடிகள் கொஞ்ச நஞ்சமல்ல என்பதை நாம் ஆயிரம் ஆண்டுக்கும் மறக்க முடியாது!

அந்த அரசின் எடுபிடி நீ! உனக்கு ஏன் அழைப்பு? அப்படி இருந்தும் உன்னை அழைத்தார்கள். அது உனக்கு மரியாதையான அழைப்பாகத் தோன்றவில்லை. மானம், மரியாதை இந்தச் சொற்களெல்லாம் உன் அகராதியிலும் இருக்கின்றனவா? ஆச்சரியம் தான்!

அரசியல் போகட்டும் இலக்கியத்துறையை எடுத்துக்கொண்டால், நீயென்ன திருக்குறளை மொழி பெயர்த்த செமியோன் ருதினா? அல்லது கம்பராமாயண ஆராய்ச்சி செய்யும் சுனேசனா? அல்லது சிலம்பை ஆராயும் சிவஞானமா? புறநானூற்றைப் புகுந்து படித்தவனா? அல்லது அகநானூற்றை ஆழ்ந்து கற்றவனா?

உனக்கேன் இந்த வம்பு?

யாரோ அறிஞர்கள் வருகிறார்கள். இங்கும் சிலர் இருக்கிறார்கள் ஏதோ செய்கிறார்கள். நமக்குப் புரியவில்லை. நடத்திவிட்டுப் போகட்டுமே என்று இருப்பதை விட்டு... நீயேன் இதற்குள்... சீ... இது என்ன வெட்கக்கேடு?

கடைசியிலே சிங்களத்தின் பிரதமரே தமிழர் எழுச்சிக்குத் தலைவணங்கியாழ் நகரில் மாநாடு நடத்துவதனை ஏற்றுக் கொண்ட சமயம் நீ திறந்த வெளி அரங்கை உபயோகிக்க அனுமதி கொடுத்தாய்! இன்று அது ஏதோ பெரிய உதவி ஒத்துழைப்பு என்று பேசுகிறாய்!

அது சரி, திறந்த வெளியரங்கு என்ன உன் சீதனச் சொத்தா? அல்லது முதுசமா? யாழ் மக்கள் சொத்து அது! மேயர் என்ற முறையில் கடைசி நிமிடத்திலாவது நீ அனுமதி வழங்காமல் விட்டிருந்தால் 'துரையப்பா என்று ஒரு மேயர் இருந்தான்' என்பது இன்று வெறுங்கதையாகிப் போயிருக்கும்!

யாரோ ஒரு வெளிநாட்டு நண்பர், நமது நாட்டின் சட்டதிட்டங்களின் அருமை பெருமைகளை அறியாதவர் என்னைக்கேட்டார். 'ஏனய்யா, திரு. துரையப்பா தானே யாழ். நகரின்மேயர்? அப்படியிருக்கும்போது அவருக்குத் தக்கமரியாதை கொடுத்து அழைப்பது தானே முறை?

சாதாரண பெரும்பான்மை பலத்தினால் ஒரு மேயரைப் பதவியிறக்கலாமென்ற பல்லாண்டு காலச் சட்டத்துக்கு சமயத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்து பீலிக்ஸ் உனக்கு உதவியிரா விட்டால் உன் சீலை எப்போதோ உரிந்து போயிருக்கும் என்ற உண்மை அந்த வெளிநாட்டு நண்பருக்கு எங்கே தெரியப்போகிறது?

ரோட்டுக்குக் கல்லையும், மண்ணையும் போட்டுத் தாரை வார்த்தாய்! மக்கள்

(7-ம் பக்கம் பார்க்க)

## அன்னைத் தமிழ் ஆரமதாய் ஆனீரோ!

ஒரு கோடித் தமிழ் இளைஞர்
உமைக் காக்க
உயிர் துறப்போமென
முரசறை பாட்டுத்
தலைவன் அண்ணு!
முன்னே—
கூட்டிய தமிழ் மாநாட்டின்
பின்னே—
ஆண்டதனில் அன்னைத் தமிழ்
ஆரமதாய் ஆனகாட்சி
ஆர் அறியார்!

அலைகடல் தாண்டி
—ஆட்சியின்
தடைக் கடல் நீங்கி
பன்னாட்டுப் பேரறிஞர்
— ஈழத்துப்
பொன்னாட்டில்
—இசைவாழ்
யாழ் நாட்டில்
— தமிழாய்
மாநாட்டில்

செந்தமிழ்த் தேன்வந்து
பாய்கின்ற வேளை
பைந்தமிழ் அன்னைக்கு
மாய்கின்ற மாலை
— ஆனதோ
இந்தமிழ் அன்னை எழில்
வேய்கின்ற மாலை
— ஆனீரோ!

— நவசோதி

# யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிடம் யாழ்ப்பாணத்தில் நடத்துவதென முடிவு செய்தது. பொது மக்கள் ஆதரவிருந்தால் மகாநாட்டை நடத்தி முடிக்கலாம் என்பதை இந்த மகாநாடு நிரூபித்துவிட்டது.

தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இப்பிரதேசத்தில்தான் மகாநாட்டை நடத்துவோம் எனக் கூறினோம். அதன்படி வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டோம்;

இதுவரை நடந்த நாலு மாநாட்டிலும், இப்படியான எழுச்சியை, உணர்ச்சியை ஆர்வத்தை தமிழ் நாட்டில் கூட காணமுடியவில்லை. இந்த மாநாட்டை நடத்துவதற்கு எத்தனையோ தடைகள் ஏற்பட்டது தடைகளை மீறிவெற்றிகண்டோம். பொது மக்கள் ஆதரவு இருக்கும் போது எந்த எதிர்ப்பு சக்தியும் எங்களை ஒன்றும் செய்யாது;

மட்டக்களப்பு, திருமலை, வவுனியா, மன்னார், மலைநாடு, கொழும்பு போன்ற இடங்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் கலந்து கொண்டனர். இம்மகாநாடு பிரதேச அடிப்படையில் நடக்கவில்லை; எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து நடத்தினார்கள், பல சிங்கள அறிஞர்கள் கலந்துகொண்டனர்.

சிங்கள அறிஞர் நாணயக்கார கட்டுரை சமர்ப்பித்து உரையாற்றினார்; முஸ்லிம் அறிஞர்களும் கலந்து கொண்டனர். திருச்சியிலிருந்து முஸ்லிம் அறிஞர் நைனா முகம்மது கலந்து கொண்டு உரையாற்றினார். ஜனுப் உவைஸ் கட்டுரை சமர்ப்பித்தார். சகல இன மக்களும் சேர்ந்து இந்த மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தினர்;

எங்கள் தமிழ்ப் பெண்கள் அணிகின்ற உடையையும், மேல் நாட்டு பெண் பிருந்தாபெக் அணிந்துள்ள புடவையையும் பாருங்கள். எங்கள் பெண்கள் இப்பெண்ணைப் பார்த்து தலைகுனிவார்கள்.

இப்படியானவர்களைத்தான் வரவேண்டாமென்று சிலர் தடுத்தனர். அவர்களைத் தமிழர் என்று கூற முடியாது. பிருந்தாபெக்தான் உண்மையான தமிழ்ப்பெண்.'

இவ்வாறு டாக்டர் வித்தியானந்தனின் வீரகர்ச்சனையை தொடர்ந்து மழலைத் தமிழ்க் குரல் ஒன்று இனிமையாக ஒலித்தது. ஆம், கனடா நாட்டு தமிழ் ஆராய்ச்சியாளரான செல்வி பிருந்தா (பெரன்டாபெக்) மாநோலைசனையும் வெல்லும் தமிழில் சிலவார்த்தைகள் பேசினார். யார் இந்தப் பிருந்தாபெக்? இவருக்கும் தமிழுக்கும் எப்படி உறவு ஏற்பட்டது. என்பதைப் பற்றி யெல்லாம் பின்னால் இக்கட்டுரையில் எழுத இருக்கிறேன்.

'நான் சின்னக் கிராமத்தில்தான் தமிழைக் கற்றேன். என்னால் இவ்வளவு பெரியகூட்டத்திற்குஎன்ன சொல்ல முடியும்? உங்கள் அன்பு ஆர்வத்திற்கு நன்றி. உங்களுடையது அருமையான ஊர். உங்கள் அலங்காரங்களைப் பார்த்து, தமிழ்மொழியில் உங்களுக்குள்ள ஆர்வத்தைக்கண்டு என் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வடிகிறது.'

செல்வி பிருந்தாவின் அழகு கொஞ்சும் தமிழைத் தொடர்ந்து இத்தாலியைச் சேர்ந்த தமிழ்மொழிப் புலவர் வணபிதா விக்கி பேசினார்.

'தமிழ் மக்களின் பாசமும் பரிவலத்தை என்றும் மறவேன்! தமிழ் மக்களின் அன்பையும் வரவேற்பையும் மறவேன். தமிழ் மக்கள் என்றும் என் மனதில் நிலைத்து நிற்பார்கள். இங்குள்ள ஆலயங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளன. தமிழ் மக்கள் நீடூழிவாழ்க! தமிழ்மொழி பல்லாண்டு வாழ்க!

—இவ்வாறாக வணபிதா விக்கி அவர்கள் 'தமிழ் வாழ்க' எனும் பேரொலியுடன் தமது உரையை முடித்த பின்னர், தமிழ் நாட்டுப்பிரதிநிதிகளில் ஒருவரான கொடுமுடி சண்முகம் கோடை இடி முழக்கம்போல முழங்கினார்:

'தாய்த் தமிழகத்தில் இல்லாத பலவற்றை இங்கு கண்டோம். அங்கு எத்தனையோ விழாக்கள் நடந்தது. ஆனால் தெருக்களிலும் வீதிகளிலும் இப்படியான சாதனையை அங்கு கண்டதில்லை. காயாத முழுமரங்களை நட்டு ஒரு வாரகாலம் வரை பசுமை மாறாத நிலையை ஏற்படுத்தினீர்கள். உலகெங்கும் இப்படியான அலங்காரம் ஒரு வாரம் நீடித்ததில்லை.

'நீங்கள் பேசும் தமிழைக் கேட்டோம். அதில் உண்மையான தமிழகத்தைக் கண்டோம். நல்ல தமிழ் மொழியை யாழ்ப்பாணத்தில் கேட்டோம். ஒவ்வொரு சொல்லையும் இறுதிவரை பேசுகிறீர்கள். தமிழ் நாட்டில் நாம் ஏட்டில் எழுதுவது போல் பேசுவதில்லை. சொற்களை விழுங்கி விடுகிறோம். ஆனால் யாழ்ப்பாணத்தில் முழுக்க முழுக்க சொற்களை உச்சரிக்கிறார்கள். நீங்கள் தான் அசல் தமிழர்கள். நாங்கள் தமிழை மறந்தாலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் என்றும் நிலைத்து நிற்கும்.

தமிழ் அன்னை உலக மக்களை கவர்ந்திருக்கிறாள். பல பல கலைக்கழகங்களில் தமிழ் பாட போதனை மொழியாக இடம் பெற்றுள்ளது. தமிழ்பற்றி அதிகம் ஆராயப்படுவது மேல் நாடுகளில்தான். உலகெங்கும் தமிழாராய்ச்சி நடக்கிறது.

தமிழ்மக்களின் பண்பையும் அன்பையும் மேல் நாட்டார் மதிக்கிறார்கள். நம் மொழிக்கு பெருமையளிக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டது மிகப்பெரிய பேரின்பம். துடிப்பு மிகுந்த யாழ் இளைஞரைக் கண்டு புத்துணர்வுபெற்று தமிழகம் செல்கின்றோம். உங்கள் உணர்ச்சியை நாம் அங்கு சென்று நாலரைக்கோடி தமிழ் மக்களுக்கும் எடுத்துக் கூறப்போகின்றோம். உங்கள் பேரன்பை சின்னஞ்சிறு இதயத்தில் எடுத்துச்செல்கின்றோம்.

'உங்கள் பிரச்சினைகளை நாம் தமிழ் நாட்டிலுள்ள நாலரைக்கோடி தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறி நல்ல வழி பிறக்க ஆவன செய்வோம்.'

இதனைத்தொடர்ந்துதான் மக்கள் வெள்ளம் ஆர்வப் பெருக்கால் விடுத்த வேண்டுகோளுக்கு செவிசாய்த்து— மக்கள் எல்லோரும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளின் பேச்சுக்களைக் கேட்க வேண்டும்; அவர்களைப் பார்க்க வேண்டுமென்பதற்காக இக் கூட்டம் வீரசிங்கம் மண்டப முகப்புக்கு மாற்றப்பட்டது.

அங்கு, மதத்தால் இஸ்லாமியரானாலும், உணர்வாலும் இனத்தாலும் தமிழரான, திருச்சி ஜமீலா கல்லூரி பேராசிரியர் நயினார் முகம்மது அவர்கள், திரண்டிருந்த தமிழ் வெள்ளத்தின் உணர்ச்சிமிக்க முகங்களை நாலாபக்கமும் திரும்பி ஒரு முறை பார்த்துவிட்டு அழகு தமிழில் சுவை சொட்டச் சொட்டப் பேச ஆரம்பித்தார். மக்கள்கூட்டம் அமைதியுடன் தமிழ்ச் சுவையை மாந்திக்கொண்டு, அதிலே திளைத்து தன்னை மறந்திருந்தது:

''1974ம் ஆண்டு தமிழ் மொழிக்கு எழுச்சியை ஏற்படுத்திய படியே பிறந்திருக்கிறது. யாழ்ப்பாணத்தில் நான் காணுவது போன்ற தமிழுணர்ச்சியை வேறு எங்குமே கண்டதில்லை—இந்த ஒற்றுமையும் கட்டுப்பாடும் தமிழர்களிடம் இருக்குமட்டும் தமிழ்மொழி இந்நாட்டில் வாழும்!

''உலகிலுள்ள 3076 மொழிகளில் மூத்தமொழிகள் ஆறு: அவற்றுள் பேச்சு வழக்கிலுள்ள மூன்று மொழிகளில் அன்புத் தமிழும் ஒன்று. அந்த மொழி தோன்றிய மண்ணே ஈழமண்தான்''

இவ்வாறு கூறிக்கொண்டிருந்த பேராசிரியர் நயினார் முகம்மது, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களது சில கவிதைகளை தனது உரைக்கு மேற்கோள் காட்டிக்கொண்டிருந்தார்—

இந்தச் சமயத்தில்தான்— புலிகள் பாய்ந்தன புள்ளிமான் கூட்டத்தின் மீது! (சிங்கள) மக்கள் அரசின் பொலீஸ் படை தமிழர்கள் மீது துளித எச்சரிக்கையும், காரணமுமின்றி வெறித் தாக்குதலைத் தொடங்கிற்று.

ஈழத் தமிழ் மக்கள் எத்தனையோ ஆண்டுகளுக்கு பிறகு மகிழ்ச்சியுடன் — தமிழ்த் தேசிய எழுச்சியுடன் — கொண்டாடிய ஒரேயொரு விழாவான இத் தமிழ்த் திருவிழாவைக் கண்டு சகித்துக் கொள்ள முடியாத குறுமதியர் கூட்டம் — விழாவின் இறுதிநாளான அன்றைய நாளை இழவுநாளாக்க திட்டமிட்டுள்ளதென்று யார் தான் எதிர்பார்த்தார்கள்?

தமிழர்கள் அடிபட்டனர்; இடிபட்டனர்; மிதிபட்டனர்! நசிபட்டனர்!!

கண்ணீர்ப்புகைக் குண்டுகள் சுடப்பட்டன! குண்டாந்தடிகள் தமிழர்களின் மேனியைப் பதம் பார்த்தன!

இன்பத் தமிழ் ஒலித்துக் கொண்டிருந்த இடத்தில் சிறிது நேரத்துக்குள் இருள் சூழ்ந்தது!

தமிழ் கேட்க வந்தவர்கள் தமிழின் சுவையறியா ஒநாய்களால் வேட்டையாடப்பட்டார்கள்!

மானம் ஒன்றே வாழ்வெனக்கொண்டு வாழ்ந்திடும் தமிழ்க் குலப் பெண்டிர், சேலைகள் இழந்து மானத்தை மறைத்திட வழியின்றி அவதியுற்றனர்!

கையொடிந்தவர்கள், காலொடிந்தவர்கள், மண்டையுடைந்தவர்கள் சொத்தைப் பறிகொடுத்தவர்கள் ஏராளம்.

எந்தச் சொத்தை இழந்தாலும் — தமிழ் எனும் சொத்தை இழக்க மாட்டோம் என்று திரண்டிருந்த மாணிக்கத் தமிழர்கள் நாய்களைப்போல சிங்கள ஆட்சியின் பேய்களால் துரத்தியடிக்கப்பட்டார்கள்!

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த தமிழ் அறிஞர்களை நம் தமிழ் இளைஞர்கள், அற்ப சொற்ப காயங்களுடன் தங்கள் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றினார்கள்!

இந் நிகழ்ச்சியின்போது — தமிழின் சுவைகேட்க வந்திருந்த ஒன்பது தமிழர்கள், 'தமிழ் எங்கள் உயிருக்குமேல்' என்பதை நிரூபித்து—தமிழ் மாநாட்டில் வெறிநாய்க் கூட்டத்துக்கு, தங்கள் உயிரையே பலி தந்தார்கள்!

ஆம், உலகிலே தங்கள் மொழிக்காகக் கூடியவர்களை அதுவும் கலாசார நிகழ்ச்சிக்காக கூடிய மக்களை — யாரும், எந்த அரசும்—இப்படி வேட்டையாடியதாக வரலாறு இல்லை!

தென்னாபிரிக்கா செய்யாததை—தென்றொடேசிய அயன்சிமித் செய்ய நினைக்காததை ''சிறிலங்கா'' செய்து முடித்திருக்கிறது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளன்று வீரசிங்க மண்டபத்தின் எதிரே தமிழ்மொழியின் மீதுள்ள பற்றால் பாசத்தால் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட ஒன்பது தமிழ்த் — தியாகிகளுக்கும் கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலி செலுத்திய படியே எனது எழுதுகோலை ஓடவிடுகிறேன்!

அந்தத் தமிழ்த் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் அதேவேளையில் — தமிழனுடைய முதுகெலும்பை மாற்றார் நொறுக்குகின்ற காலம் மாறி—

'தறுக்கிலுள் பிறதேசத்தார்
 தமிழன்பால்
  எந்நாட்டான்பால்
வெறுப்புறும் சேதி
  சொன்னார்
 ஆகையார்
  விரைந்தவன்னுரை
நொறுக்கினர் முதுகெலும்பை
 தமிழர்கள் என்னும் சேதி
குறித்தசொல் கேட்டு
  இன்பத்திற்
 குதிக்கும் நாள் எந்நாள்?'

என்ற கேள்வியும் என்னுள் எழவே செய்கிறது!

நாய்கள்போல் அடிபடவும் உதைபடவும், உடப்படவும் சாகவுமே பிறந்தவர்களா தமிழர்கள்?

அனைத்துலகரீதியில் தமிழை ஆராய்ந்தால் மட்டுமே போதுமா? தமிழனையும் ஆராயவேண்டாமா என்கின்ற கேள்விகள் மனதைக் குடையவே செய்கின்றன?

இதே கேள்வியை தமிழாராய்ச்சி மாநாட்டின்போது இங்கு வருகை தந்திருந்த தமிழ் இளைஞர் ஒருவரும் எழுப்பவே செய்தார்; அவரை வைத்துக்கொண்டு இந்நாட்டு நாளேடுகள் நாள்தோறும் திரித்துவிட்டகயிறுதாம் எத்தனையெத்தனை?

## அஞ்சலி

(பூநகர் மரியதாஸ்)

மரகதத் தமிழ் ஈழத்தின்
தங்கப் புதல்வர்கள்—
ஒன்று கூடி,
விழா வெடுத்த பெரும் கோலம்
இரவெல்லாம் பகலாகிட
வீதியெங்கும் மகர தோரணம்
பெருமரங்கள் நாட்டிற்று,
களிப்படைந்த மாந்தரின்
ஒலி-மங்கலபேரிகைகளின் பிறிதொரு ஒலி
ஒ............
தமிழுக்கு பெரு விழா......
எட்டாம் நாளில் திரண்ட
சிங்கத் தமிழர் கூட்டம்
கண்டே—மிரண்டே
நாவுகளில் நரம்பில்லாத
கூட்டமொன்று,
நடத்திய பெரு விளையாட்டு......
அல்லோல கல்லோல மாகிட......
ஒன்பது தீரர்கள் பலி கொண்டனரோ!
தீரர்களே—உங்கள் உடல்கள்
மண்ணுக்குள் இரையாகி—
உங்கள் உயிர்கள் ... எங்கள்
நெஞ்சினிலே சங்கமம்,—உங்கள்
சமாதியினிலே நான் தலைபுதைத்து,
அழுகின்றேன் — அன்புத் தோழரே!
எங்கு சென்றீர்.......ம்......
உங்களை மறக்க மாட்டேன்
இரண்டு பூ நிரந்தரம்......
உங்கள் சமாதியிலே
மலரும்—நிச்சயமாக
ஒன்று—
தமிழுக்கு ஒரு பூ—உன்னைத் தந்த
அன்னைக்கு மற்றொரு பூ...
உயிர்ப்பு ஒன்றிருந்தால்—நிச்சயம்
மீண்டும் உன் வரவுக்கு
உன் சமாதியினிலே...
காத்திருப்பேன்—உன் சமாதியை
துகர்வேன்—எந்நேரமுமே!
குளிர் நிலவின் தண்ணொளி
உங்களுக்கே!......தென்றல்
தவழ்ந்து வந்து தவழுவதும்
உங்களையே!— மலர்கள்
மலருவதும் உங்களுக்காகவே...!
வானத்தின் தேவதூதர்களோடு
நீங்கள் கலந்து—
இன்றோடு,
முப்பத்தொரு நாட்கள்......
நிச்சயம் அருள் உலகின்,
பெருமாட்சிமை அதிபதிகளே!
நிரந்தரம் வாழுங்கள் :
தமிழுள்ள வரை—
உங்கள் நினைவிருக்கும்
வாழிய நீவிர்! வாழியவே!

## வளரும்

### வேலணை காரைநகர் தெற்கு கி. ச. கோரிக்கை!

சனவரி 10ம் நாள் அனைத்துலகத் தமிழாராச்சி மகாநாட்டின் இறுதி நாள் பொதுக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவிதம் குறித்து விசாரணை நடத்துமாறு அரசை கோருவதென [illegible] கிராமச்சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலணை கிராமச்சபை கூட்டத்தின்போதும் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# செ ன் ட் ர ல் (மருதானை) 2, 6, 9.00
ஞாயிற்றுக் கிழமை 10, 2, 6, 9.00

எல்லோரும் எல்லா வயதினரும் எல்லாநேரமும் பார்க்ககூடிய படம்!

- பல ஆயிரக்கணக்கானேரை ஆனந்தத்தில் ஆழ்த்தியது!
- சிரிப்பும், பொழுதுபோக்கும், உள்ளத்தை உருக்கும் கதையம்சமும் கொண்டது.

**சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ் -நடித்த-**

சுஜாத்தா சினி ஆர்ட்சின்

# எங்கிருந்தோ வந்தாள்
(ஈஸ்மன் கலர்)

விரைவில் எதிர்பாருங்கள் —
நாகேஷ், விஜயலலிதா
எம். ஆர். ஆர். வாசு நடித்த

**தேன் கிண்ணம்**


## இலங்கைத் தமி
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

'இலங்கைத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு தலையிட்டு தமிழர்களுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென்றும் தமிழக அரசு இதற்கு முயற்சிசெய்யவேண்டுமென்றும்' மேலும் அ. தி. மு. க. மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கச்சதீவை இலங்கைபெற்றுக்கொள்ள நினைப்பது நியாயமற்றது. தமிழகத்திற்கு சொந்தமான நிலத்தைப் பறிக்க நினைப்பது ஏற்கத்தக்கதல்ல. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தியா இலங்கைக்கு கச்சதீவுக்கு இரண்டடியை விட்டுக்கொடுத்தால் கூட மாணவர்கள் தங்கள் உயிர்தந்து கச்சைதீவை காப்பார்கள். இதை இந்திய பிரதமருக்கு எச்சரிக்கையாக சொல்லிக்கொள்ளுகிறோம்' என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இம்மாநாட்டில் அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எம். ஜி. ராமச்சந்திரன் பேசும்போது கூறியதாவது:

'கச்சதீவு யாருக்கு சொந்தம் என்று பேசப்படுகிறது. தமிழ் நாட்டைச்சேர்ந்த மீனவர்கள் கச்சைதீவு ஓரமாகச் சென்று மீன்பிடிக்க முடியாமல் இலங்கை கடற்படை இராணுவம் அங்கு ரோந்து சுற்றிக்கொண்டிருக்கிறது. தமிழ் நாட்டிற்கு சொந்தமான அந்நிலைவ இலங்கை அரசு சொந்தம் கொண்டாடுகிறது. இலங்கைத் தமிழர்களை விரட்டியடிக்கும் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயகா கச்சதீவை தட்டிக்கொள்ள முயலுகிறார். நான் ஒன்றை மட்டும உறுதியாகக் கூறுவேன். இடத்தை விட்டுக்கொடுத்து மடத்தைப் பிடிக்க தமிழர்கள் அவ்வளவு ஒன்றும் கையாலாகாத பஞ்சைப் பராரிகள் அல்லர்'


கொடிகாமத்தில்
சுதந்திரன்
கிடைக்குமிடம்:-
சு. கந்தசாமி
நிர். 1, பஸ் நிலையம்
கொடிகாமம்.



**5வது வாரம்**

# செல்லமகால்
வின்சர் (யாழ்நகர்

எம். ஜி. ஆர்.
ஜெயலலிதா
ஏ. வி. எம். ராஜன்,
புஷ்பலதா,
அசோகன்,
சோ, மனேரமா
நடித்த




முரசொலி மாறனின்
''சந்திரமண்டல விஜயம்''
எனும் ''கதாகாலட்சேபம்''
திரையில் தருபவர்: எம். ஜி. ஆர்.

# கெயிட்டி
(கொட்டாஞ்சேனை)

ஜெமினி-சாவித்திரி
எம். கே. ராதா,
வீரப்பா,
ஈ. வி. சரோஜா,
தங்கவேலு
—நடித்த—

# கற்புக்கரசி
(புத்தம் புதிய கொப்பி)



**கெப்பிட்டல்** (கொழும்பு) **பிளாசா** (வெள்ளவத்தை) **வெலிங்டன்** (யாழ் நகர்)

# 2வது வெற்றி மாதம்

"சொர்க்கம்" என்பது இறப்புக்குப் பின் ஏற்படுவது அல்ல! இல்லத்தில் நல்வாழ்வும் இன்பமும் நிறைவதே சொர்க்கம்!

**சிவாஜி, கே. ஆர். விஜயா, பாலாஜி, மனேகர், நாகேஷ், சச்சு, எம். ஆர். ஆர். வாசு**

நடித்த—





இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் பெப்ரவரி மாதம் 10-திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.